செந்தமிழ்ச் செல்வி

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES LIBRARY ★ MADRAS-600020 ★
15 APR 1974

உள்ளுறை

	பக்கம்
கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி	௪0௬
வித்து மிடல் வேண்டுமோ?	௪௧௫
அணில் வரிக்காய்	௪௧௭
பாப்பரணே	௪௨0
ஆப்பிரிக்கச் சுற்றுலா	௪௨௫
தமிழும் மலேயாளமும்	௪௩௧
தமிழ்க் கலாசாலே...நிலே	௪௩௬
தமிழ் பயிற்றுமொழி...தடைகள்	௪௩௮
தமிழில் எழுதுவோம்	௪௪௨
செய்திகளும் குறிப்புகளும்	௪௫௩
மதிப்புரை	௪௫௬

சிலம்பு-௪௮] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௫, பங்குனி (April'74) [பரல்-௮

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு.

சா. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

கழகவழி வெளிவந்துள்ள வரலாற்று நூல்கள்

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் —கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி.	8	75
குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு —கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி.	4	00
பல்லவர் வரலாறு—டாக்டர் மா. இராசமாணிக்கம்	8	75
மொகஞ்சதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் —டாக்டர் மா. இராசமாணிக்கம்	6	25
தமிழகம் (படங்களுடன்)—ந. சி. கந்தையா	7	50
தமிழ் இந்தியா ,,	7	00
நமது நாடு ,,	3	00
பழந்தமிழ் ஆட்சி—தேவநேயப் பாவாணர்	4	50
தமிழக சாவகக் கலைத் தொடர்புகள் (தமிழக அரசின் பரிசு பெற்றது) —அ. இராகவன்	7	00
தமிழக வரலாறு சொற்பொழிவுகள்	8	50

செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௮ | திருவள்ளுவர் ஆண்டு உ௦௦ரு, பங்குனி
ஏப்ரல் 1974 | பரல் ௮

கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி

(முன் பரல் ௩௬௭ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் மா. இராசமாணிக்கனர் 1941இல் முதன் முதல் தமிழில் எழுதிக் கழகவழி வெளியிடப்பெற்ற மொகஞ்சொதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்னும் நூலைப்பற்றி எழுதுவதற்கு முன் அடியிற்கண்ட செய்திகளைக் குறிப்பிடுவது முதன்மையாகின்றது.

சேலம் சலகண்டபுரம் தோரமங்கலம் ஆசிரியர் அ. வரத நஞ்சைய பிள்ளை யவர்கள் 'தமிழ்த்தாய் திருப்பணி' என்ற தலைப்பில் தமிழ்ப் புலவர் வரலாறுகளையும் மற்றும் பலதுறைகளில் பணிபுரிந்த சீரியோர்களைப் பற்றிய வரலாறுகளையும் தொகுத்துச் செய்யுள் நடையில் 'வரலாற்றுக் காப்பியம்' என்றதோர் அரிய நூலை வெளியிடுவான் கருதித் திட்டம் வகுத்து 'வேண்டுகோள்' ஒன்றை 6-8-1942இல் அச்சிட்டுள்ளனர். அதனைக் கழகத்தை நிறுவிய என் அருமைத் தமையனர் உயர்திரு வ. திருவரங்கனர் அவர்கட்கு அனுப்பித் தமது வரலாற்றையும் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் மறைமலையடிகளார் தலைமாணக்கருமாகிய மணி திருநாவுக்கரசனர் வரலாற்றையும் எழுதியனுப்புமாறு வேண்டியுள்ளனர். அவ்வேண்டுகோளை அடியிற் காண்க.

வேண்டுகோள் :

தமிழ்த் தாய் திருப்பணி

உயர்திரு. திருவரங்கம் பிள்ளை அவர்கட்கு, வணக்கம்.

தமிழகத்துப் புகழ் மிகுத்த பெரியீர் !

தலைப்பிற் கண்ட பெயரிய செய்யுள்நடை நூலொன்றை ஆக்க முனைந்துள்ளேன். அதில் தாய்மொழியின் தனிச் சிறப்பை ஆய்ந்து விளக்கியும், மொழி வளர்ச்சியின் பண்டைக் காலப் பெருமையையும், இடைக்காலச் சிறுமையையும் எடுத்துக்காட்டியும், தற்காலத் தமிழ்ப் புலவர்களும், தலைவர்களும், செல்வர்களும், தமிழன்பர்களும் தாய் மொழிக்காற்றும் திருப்பணிகளைப் பாராட்டியும் முன்னேறுதற்கேற்ற செயன்முறைகளை விரித்துரைத்தும், இவ்வாற்றால் தமிழ் மக்களை ஊக்கிப் பிற்காலத்து மொழியும் நாடும் ஆக்கம் பெறுதற்கேற்ற வழிகள் பல உணர்த்தப்படுகின்றன. மேலும்,

இவ்விருபதாம் நூற்றாண்டிலே, யானறிந்த தமிழ்ப் பேரறிஞர், தமிழ்ப் பணி புரிந்த மாபெருந் தலைவர்கள், மக்களின் சீர்திருத்தக் குழுவினர், நாட்டுப் பற்றுடைய நல்லோர், இயல், இசை நாடகம் என்னும் மூவகைப் பயிற்சியானும் தேர்வுடைய சீரியோர் ஆகியோர்களின் வாழ்க்கை வரலாறுகளை விளக்கியும், அன்னாரின் தமிழ்ப்பற்று, சிறப்புத் தொண்டு ஆகியவைகளைப் பாராட்டியும், என்னுடைய நண்பர்களாய் என் மனக்கோயிலில் வாழும் அரிய பெரியோர்களை ஒருசேரத் தொகுத்து நிலைப்படுத்த விரும்பியுள்ளேன். இக்காலத் தமிழ்ப் பெருமக்களின் வரலாறு, மொழிநிலை, நாட்டுநிலை ஆகியவற்றைப் பிற்காலத்தவர் அறிதற்கும் இந்நூல் உற்ற துணையாக நிற்கும்.

இப்பெருநூலில் என்னுடைய மெய்யன்பராகிய தங்கள் வரலாறும் இடம்பெறல் வேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறேன். ஆகவின் தயை செய்து. அடியிற்கண்ட தங்கள் வரலாற்றையும் வினாக்களுக்கேற்ற விடைகளையும் விரைவில் எழுதியனுப்பி யுதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். காகித விலையும் கூலியும் ஏற்றமான இக்காலத்தே எனது குறிக்கோட் கனவாகிய "தமிழ்த் தாய் திருப்பணி" சிறப்புடன் அச்சேறி யுலாவர, இயன்ற எல்லா வகையினும் அன்பர்கள் உதவி புரிவார்களாக !

வரலாற்று வினாக் குறிப்பு

1. பிறந்த ஊர், வருடம், மாதம், நாள் ?
2. பெற்றோர்களின் பெயர் ? அவர்களின் தமிழ்த் திருப்பணி ?
3. உடன் பிறந்தார் ?
4. கல்வி, பட்டம், பதவி, தொழில் ?
5. மணவினை, மணந்த நாள் ?
6. மனையாட்டியின் பெயர், மக்கட்பேறு, மனைமாட்சி ?

7. நெறி, கொள்கை, குறிக்கோள்?
8. தலைமை தாங்கிய மாநாடுகள், நிகழ்த்திய சொற்பொழிவுகள்?
9. ஆற்றிய - ஆற்றிவரும் தொண்டு, அருஞ்செயல்?
10. சமூக, அரசியல் இயக்கத் தொடர்பு?
11. ஆக்கிய நூல், உதவிபெற்ற நூல், வெளியிட்ட நூல், உரை நூல்?
12. வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள்?

மற்றும், இவ் வினாக்களில் அடங்காதன பிறவும் வேண்டப்படுகின்றன. இவற்றுடன் உயர்திரு மணி திருநாவுக்கரசனார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பும் அனுப்பியுதவுமாறு பெரிதும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தோரமங்கலம்,
சலகண்டபுரம்,
சேலம் கோட்டம்.

தங்கள் அன்பன்,
ஆசிரியன்—அ. வரதநஞ்சையன்.
6—8—1942.

மதுரை ஆலை வேந்தரும் தமிழ்த் தொண்டில் மிக்க ஈடுபாடுடையவரும் தமிழில் புலமை மிக்கவரும் என் பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரியவருமாகிய கருமுத்து தியாகராச செட்டியாரவர்கள் முதுபெரும்புலவர் ஆசிரியர் வரதநஞ்சைய பிள்ளையவர்களை வரவழைத்துத் தமது மாளிகையிலேயே சில ஆண்டுகள் இருக்கச் செய்து தமக்குக் கிடைக்கப்பெறும் ஓய்வு ஒழிவு நேரங்களில் சில நூல்களை முறையாகப் பாடங் கேட்டு வந்தனரென்பதறிவேன்.

ஆசிரியர் திரு பிள்ளையவர்கள் அருமைத் திருமகனார் திரு வ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் சில ஆண்டுகட்கு முன் இறையடி சேர்ந்த செய்தி தெரிந்து வருந்தலானேன். அவர் தம் திருமகனார் திரு இரா. மாணிக்கம் எம். ஏ., எம். லிட். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணி புரிந்து வருகின்றனர்.

ஆசிரியர் வரதநஞ்சைய பிள்ளையவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும், சைவசித்தாந்த மெய்யுணர்வு நூல்களிலும் பெரும்புலமை யுடையவர்கள். மேலும் பல பாவினங்களில் விரைந்து செய்யுளியற்றுந் திறனுமுடையவர்கள். அவர்கள் எண்ணியவாறு 'தமிழ்த்தாய் திருப்பணி' என்னும் வரலாற்றுக் காப்பியம் உருவாகி வெளிவராமற் போயிற்று. வெளிவந்திருக்குமாயின் தமிழ்நாட்டுக்கு அஃதொரு பெரும் வரலாற்றுச் செல்வமாயிருக்கும். அதனைப் பெறுந் தவம் தமிழர்க்குக் கிடைக்காமற் போனது மிகவும் வருந்துதற்குரியது

28-3-74 இல் திரு பிள்ளையவர்களின் பெயரன் திரு. இரா. மாணிக்கம் அவர்களைப் பச்சையப்பன் கல்லூரியில் அவர்தம் உடன் ஆசிரியர்களோடு கண்டு அவர்கள் தாத்தா வெளிப்படுத்திய 'தமிழ்த்தாய் திருப்பணி' என்னும் வேண்டுகோள் என்னிடம் இருக்கிறது. அதனால் அவர்களிடம் புலவர் சிலர் எழுதிய வரலாறுகள் இருத்தல் வேண்டும். எனவே தாங்கள் கோடை விடுமுறையில் ஊருக்குப் போய் அவர்கள் தொகுத்து வைத்திருக்கும் பழைய நூல்கள், புலவர் கடிதங்கள், அவர்கள் விரும்பிய வண்ணம் வரப்பெற்ற புலவர்களின் வரலாறுகள் முதலியவற்றைத் தூசி தட்டி வகைப்படுத்திப் பட்டி ஒன்றெழுதுமாறும், அதற்குப் படி ஒன்றெடுத்து எனக்கு அனுப்புமாறும் வற்புறுத்திக் கூறி வேண்டினேன். யான் அப்படிச் சொன்னபோது அவ்வச்சிடப்பெற்ற வேண்டுகோளை உடனே பார்க்க வேண்டுமென்ற விழைவு அவர்கட்கு ஏற்பட்டிருப்பின் எனது உந்து வண்டியிலேயே அவர்களை அழைத்து வந்து காட்டியிருப்பேன். எதற்காக இதனை எழுதுகிறேன் எனின் யான் வரலாற்றுச் செல்வங்களைத் தொகுப்பதில் எத்துணை விழிப்பும் ஆர்வமுங் கொண்டிருக்கிறேன் என்பதைப் பிறர் அறியும் பொருட்டேயாகும்.

புலவர் வரலாறுகளைத் தனித்தனி நூல்களாகவும், தொகுப்பு நூல்களாகவும் கழகம் வெளியிட்டு வருதலை யாவரும் அறிவர். அதனைத் தனிப்பெருங் கடமை எனக் கருதிக் கழகம் செய்து வருகின்றது. கழகம் ஒரு பதிப்பு நிறுவனமாக மட்டும் இருக்குமாயின் வரலாறுகளைத் தொகுக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியிருக்காது. அங்ஙனம் தோன்றித் தொகுப்பினும் தொகுத்தவற்றைப் பேணிக் காக்கவும் முடியாது. கழகம் புத்தக விற்பனையினால் பெறும் வருவாயில் நேர் பாதி அறநிலையங்கட்கு வழங்கி வருதலால் மூன்று நூல்நிலையங்களை நடத்தி வருகின்றது. அவற்றில் சென்னையிலுள்ள மறைமலையடிகள் நூல் நிலையத்தில் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படும் வகையில் பலதுறை நூல்கள், பழைய இதழ் தொகுப்புகள், மலர்கள், புலவர் வரலாறுகள், கடிதங்கள், புலவர் படங்கள், திருக்கோயிற் படங்கள் முதலியவை யெல்லாம் தொகுத்துப் பாதுகாதது வகைப்படுத்தி வைக்கப் பெற்றிருக்கின்றன.

எனவே தமிழ்ப் பேராசிரியர் திரு இரா. மாணிக்கம் அவர்களிடம் "உங்கள் அருமைத் தாத்தா தொகுத்து வைத்திருக்கும் புலவர் வரலாறுகள், கடிதங்கள் முதலியவற்றை மறைமலையடிகள் நூல்நிலையத்திலே ஒப்படையுங்கள். அவற்றைப் பாதுகாத்துப் பயன்படச் செய்வேன்" என்றேன்.

அதற்கு அவர்கள் "எங்கள் மூதாதையர் தேடி வைத்தவற்றை யான் எப்படிக் கொடுக்கமுடியும்?" என்று சொன்னார்கள். அவற்றைக் கொடுப்பதற்கில்லை எனினும் பட்டி எடுத்து அதற்கு ஒரு படியாவது அனுப்புங்கள் என்று மீண்டும் வேண்டினேன். அங்ஙனஞ் செய்வதாக ஒப்புக் கொண்டார்கள். ஊருக்குப் போகுமுன் தம் இல்லக்கிழத்தியாரோடு மறைமலையடிகள் நூல்நிலையத்தைப் பார்க்கும்படி அழைத்தேன். இங்கே ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

தனிப்பட்டவர்களிடமிருந்து நூல்களும், கடிதங்களும் பிறவும் ஒழிந்து போன செய்திகளை யான் அறிவேன். சங்க இலக்கண இலக்கியங்களை முதன் முதல் பதிப்பித்த முது பெரும் புலவர் டாக்டர் சாமிநாதையரவர்களும், சி. வை. தாமோதரனாரவர்களும் தாம் பதித்த நூல்களின் பதிப்புரையில் தாங்கள் ஒருமுறை ஓரிடத்தில் பார்த்த சுவடிகள் அடுத்தமுறை போய்க் கேட்டபோது, அங்கில்லாமல் ஒழிந்து போய்விட்டன என்று எழுதியுள்ளனர். அண்மையில் நடந்த செய்தியினை இங்கே மிகவும் வருத்தத்தோடு குறிப்பிடுகின்றேன்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கச் செயலரும், சைவப் பஞ்சாங்கக் கணியரும், தமிழகப் புலவர் குழு உறுப்பினருளொருவருமாகிய முதுபெரும்புலவர் உயர்திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சங்கரன்கோயிலில் தமதில்லத்தில் 3 பேழைகள் நிரம்பப் புத்தகங்களையும், தமக்கு வந்த கடிதங்களையும், பிறவற்றையும் தொகுத்து வைத்திருந்தார்கள். சென்னைக்கு வந்து தம் மூத்தமகனார் தமிழ்ப் பேராசிரியர் திரு. இ. சு. முத்துசாமி, எம். ஏ. அவர்களோடு தங்கியிருக்கையில் தம் இளைய மகன் வீட்டிலுள்ள புத்தகங்கள், பேழைகள், மேசை நாற்காலிகள் அனைத்தையும் விற்று விட்டனர். புத்தகங்களெல்லாம் கடைத்தெருவில் எடைபோட்டுக் கொடுக்கப் பெற்றதாகக் கேள்வியுற்று வருந்தலானேன்.

24-2-74இல் சங்கரன்கோயிலுக்கு அருள்மிகு கோமதியம்மை வழிபாட்டுக்குச் சென்றிருந்தேன். விற்கப் பெற்ற நூல்களைத் தேடியதில் மேலட்டை இல்லாமலுள்ள ஐந்து நூல்களை மட்டும் கடைத்தெருவில் ரூபா ஐந்து கொடுத்து வாங்கினேன். இங்ஙனமெல்லாம் நூல்கள் ஒழிந்துபோகின்றன என்பதைக் கழகம் அமைக்கும் நூற்காட்சியின்வழிப் பிறர் அறியும்பொருட்டு அவற்றை வைத்திருக்கிறேன். ஓய்வு பெற்ற உயர்நீதிமன்றத் தலைமை நடுவர் உயர்திரு மா. அனந்தநாராயணன் ஐ. சி. எஸ். அவர்களுடைய தந்தையார் திரு அ. மாதவையர்

அவர்கள் எழுதிய நூல்களும் வெளியிட்ட 'பஞ்சாமிர்தம்' என்ற இதழ்களும் ஒழிந்துபோன நூல்களோடு தொலைந்தன என்பது மிகமிக வருந்துதற்குரியது. யான் அவற்றை என்னிடங் கொடுக்கும்படி பன்முறை கேட்டபோது உயர்திரு இ. மு. சு. அவர்களுக்கு மனமில்லாது போயிற்று.

பெருமக்கள் சிலர் எழுதிய 'தன் வரலாறு' நூல்களைப் பற்றி யறிவோம்.

'வ. உ. சி. சுயசரிதை'

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் தம் நண்பர் பரலி நெல்லையப்பர் விரும்பிய வண்ணம் 1910 ஆம் ஆண்டில் கோவைச் சிறையிலிருந்தபோது 152 பக்கங்களில் அகவற் பாவில் தன் வரலாற்றை எழுதினர். அது 1946 இல் அவர் தம் திருமகனாரால் வெளியிடப்பெற்றது.

நாமக்கல் கவிஞர் 'என்சரிதை'

இந்நூலை 1944 இல் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை 411 பக்கங்களில் எழுதியுள்ளனர்.

நாடகப் பேராசிரியர் 'என் சுயசரிதை'

பம்மல் சம்பந்த முதலியார் தம் வரலாற்றை 76 பக்கங் களில் எழுதி 1963 இல் வெளியிட்டனர். கழக ஆட்சியாளர் விரும்பிய வண்ணம் 'யான்கண்ட புலவர்கள்' என்ற நூலை 1902இல் எழுதினர். 15 பெரும் புலவர்களின் வரலாறுகளைக் கொண்ட அது கழகப்பதிப்பாக வெளியிடப்பெற்றது.

மேதகு வ. ச. சீனிவாச சாத்திரி 'என் வாழ்க்கையின் அம்சங்கள்'

இந்நூல் 1954 இல் கலைமகள் நிலையத்தாரால் வெளியிடப் பெற்றது.

மறைமலையடிகளார் 'தன் வரலாறு'

ஆங்கிலத்தில் அடிசன் இயற்றிய கட்டுரைகளில் ஆறை மட்டும் அடிகளார் மொழிபெயர்த்துச் 'சிந்தனைக் கட்டுரைகள்' என்ற தலைப்பில் 1908 இல் வெளியிட்டனர். அதன் பிற் பகுதியிலுள்ள சிறப்புரையின்கண் 8 பக்க அளவில் அக்காலம் வரையுள்ள தம் வரலாற்றை எழுதிச் சேர்த்துள்ளனர்.

தமிழகத்திலே இவ்வைவர், டாக்டர் சாமிநாதையர், திரு. வி. க. ஆகியோரைத் தவிர வேறு எவரும் 'தம் வரலாறு' எழுதியதாகத் தெரியவில்லை.

(தொடரும்) —வ. சு.

வித்து மிடல் வேண்டுமோ ?

[ஆபிரகாம் அருளப்பன்]

திருக்குறள் விருந்தோம்பல் அதிகாரத்தில் திருவள்ளுவர்,

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம் ?"

என வினவுகின்றார். இதற்குப் பரிமேலழகர், 'முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது விளைபுலத்திற்கு வித்திடுதலும் வேண்டுமோ ?' எனப் பொருள் கூறித் 'தானே விளையும் என்பது குறிப்பெச்சம்', என விளக்கமுந் தருகிறார். 'பொருள் வருவாயாக இயற்றுமிடம் நன்றாகப் பயன்படும் என்றவாறு', என்பது மணக்குடவர் விளக்கம். 'ஒன்று நூறாயிரமாகப் பொலியும் (விளையும்)' என்பது பழைய வுரையும் பரிதியாரும் விளம்பும் விளக்கம்.

எனவே, 'வித்து மிடல் வேண்டுங் கொல்லோ ?' என்பதன் கருத்து, விதைத்த வித்தின் அளவான விளைவுப் பயனன்றி அதன்மேற் பன்மடங்கு விளையும் என்பதாகும். இத்தகைய விளைவு அரிதாக நிகழ்தல் உண்டு என்பது பிற இலக்கியங்களாலும் காணப்படும். முடத்தாமக் கண்ணியார், சோழன் கரிகால்வளவனைப் பொருநராற்றுப்படையில்,

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே !"

எனவும், கல்லாடனார், பொறையாற்றுக் கிழானைத்

"துளிபத னறிந்து பொழிய
வேலி யாயிரம் விளைகவின் வயலே !" (புறம். 391)

எனவும் வாழ்த்தியுள்ளமை காண்க.

விருந்தோம்பி மிச்சின் மிசைதலாகிய அறத்தின் பயனாக விதைத்த அளவுக்கேற்ப வன்றி அதனினும் பன்மடங்கு மிகுதியாகத் தெய்வச் செயலால் விளையும் என்பது கருத்து.

திருக்குறளில் வேறிடத்தும், தெய்வம் அருளும் வகையைத் திருவள்ளுவர் காட்டுகின்றார் :

"குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்."

எனவும், அங்ஙனம் தெய்வம் முந்துற்று உதவுதல் காரணமாக,

"சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு."

எனவும், பொன்றுங்காற் பொன்றாத் துணையாக அறக்கடவுள் புண்ணியஞ் செய்தவனைத் தாங்கிச் சென்று வீடடைவிக்கும் என்பதனை,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

எனவும் புலப்படுத்துதல் தெளிக.

'அவர்க்கு விதைத்தா விளைகிறது? தெய்வம் வழங்குகிறது', என்னும் உலக வழக்குப் பேச்சையும் ஓர்க.

கன்றுகாலிகள் கடித்து அழிக்காவண்ணம் நல்ல வேலி கட்டி அடைக்கப்பட்டுள்ள நிலங்களில் புளி, புன்னை, வேம்பு, மா, வாகை முதலிய மரங்கள் நிலத்துடையார் வித்திடாமலே இயல்பாக முளைத்து வளர்ந்து சில ஆண்டுகளில் மரங்களாகிப் பயனளித்தலை இன்றும் உலகிற் காணலாம்.

ஆகவே, விருந்தினரை உண்பித்து மிஞ்சியதை உண்ணும் அறவாளனுடைய புலத்தில் அவன் இட்ட வித்தின் சிறந்த அளவோடு இடாத வித்தின் நல்லளவான பயனும் விளையும் என்பது பண்புடைய பெரியோர் கண்ட உண்மை.

அறவாழ்வுடையான் தன் புலத்தில் தான் எதிர்பார்ப்பதினுங் கூடுதலாக விளைதலைக் காணின் தன் உழைப்பில் மேலும் மேலும் ஆர்வமும் ஊக்கமுங் கொள்வானே யன்றிச் சோர்வு கொள்ளான்; அறத்தின் அளவைப் பெருக்குதற்கு அது வாய்ப்பாதல் கண்டு மகிழ்வான். வித்தட்டு ஊட்டலும் உண்ணலுமாகிய விரகின்மையைப் புரியக் கருதுவார் யாரே?

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்?"

என்னும் இவ்வருமைத் திருக்குறள் வெறுங் கற்பனையோ? கூர்ந்த மதிநுட்பமும் ஆழ்ந்த நூலறிவும் தேர்ந்த உலகியல் தெளிவும் நிறைந்த புலமையின் பயனாகிய மெய்ம்மையோ?

"பரந்த பொருளெலாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவர்க்
காய்தொறு மூறு மறிவு."

———

அணில் வரிக்காய்

[புலவர் இரா. இளங்குமரன்]

அணிலின் முதுகில் அமைந்துள்ள கீற்றுகளைக் கண்டு அதன் அழகில் மயங்கிய ஆசிரியர் தொல்காப்பியனார் அதனை, "மூவரி அணில்" (மரபியல். 6) என்றார். சங்கச் சான்றோருள் ஒருவராய கடியலூர் உருத்திரங் கண்ணனார் அணிலின் வரிகளை அழகுற உவமை செய்து அகமிக மகிழ்ந்தார்.

"பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற அணில்"

என்பது அவர் வாக்கு.

"இலவின் பசுங்காய் முற்றி வெடித்து அதன் வெண்பஞ்சு வெளிப்பட்டுத் தோன்றினால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு இருக்கும் வரிகளைக் கொண்ட முதுகினையுடைய அணில்" என்பது எத்துணை அரிய உவமை!

அணில், அழகுறத் துள்ளி விளையாடும் ஒரு வீட்டின் முற்றத்தை, "அணிலாடு முன்றில்" என்று பாராட்டிய சான்றோரை 'அணிலாடு முன்றிலார்' (குறுந்தொகை. 41) என்று பெயர் சூட்டி மகிழ்ந்தது பழந்தமிழகம்.

அணிலைத் தொண்டராக்கி, ஆர்வத்தால் உலவவிட்டார் ஒரு தொண்டர்.

"குரங்குகள் மலையைத் தூக்கக்
குளித்துத்தாம் புரண்டிட் டோடித்
தரங்கநீர் அடைக்க லுற்ற
சலமிலா அணிலம் போலேன்"

(தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமாலை. 27).

என்பது அவர்வாக்கு.

இராமர் திருவணை கட்டிய நாளில் குரக்கினம் மலைகளைத் தூக்கி வந்து உதவிற்று. அணிலோ கடல் நீரில் குளித்துக் கரை மணலில் புரண்டு, ஒட்டிய மணலை அணையில் தட்டி ஆர்வம் செலுத்தியது என்ற அளவில் ஆழ்வார் அமைந்தார். அதனை மேலும் கற்பித்துக் கதை நீட்டியது பிற்கால உலகம்.

"அணிலின் அருந்தொண்டுக்கு ஆளாகி உவந்த இராமர் தம் கைவிரல்கள் மூன்றால் முதுகில் வருட அதனால் அமைந்ததே "மூவரி" என்பது அக் கதை.

இயற்கை உவமை, இயல்பு நவிற்சி இவற்றையே உயிர்ப் பாகக்கொண்ட சங்கச் சான்றோருள் ஒருவராகிய பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, அணில் வரிகளை ஒரு காயின் மேலுள்ள வரிகளுக்கு ஒப்பிட்டு அதனை, 'அணில்வரிக் கொடுங்காய்' (புறம். 246) என்றார், இதற்குப் பழைய உரையாசிரியர் 'அணி லினது வரிபோலும் வரியையுடைய வளைந்த வெள்ளரிக்காய்' என்று பொருள் கூறினார்.

ஆயர் முதுமகள் மாதரி தம் மகள் ஐயையைக் கண்ணகி யார்க்கு அருந்துணையாக்கி, மடைக்கலங்களுடன் வழங்கிய அட்டிற் பொருள்களுள் வெள்வரிக் காயும் ஒன்றாகும். அதனைக் கூறும் அடிகள் வாக்கை, 'வால்வரிக் கொடுங்காய்' என்று பாடங் கொண்டார் அரும்பத உரையாசிரியர். 'வாள்வரிக் கொடுங்காய்' என்று பாடங் கொண்டார் அடியார்க்குநல்லார்.

அரும்பத உரையாசிரியர் 'வால்வரிக் கொடுங்காய்' 'வெள் வரிக் காய்' எனப் பொருள் எழுதினார். அடியார்க்கு நல்லார் 'வாள்வரிக் கொடுங்காய்' என்பதற்கு 'வளைந்த வரியையுடைய வெள்ளரிக்காய்' எனப் பொருள் எழுதி "வால்வரிக்காய் எனப் பாடம் ஓதி வெள்வரிக்காய் என்பாரும் உளர். 'அணில்வரிக் கொடுங்காய்' எனப் புறத்தினும் காட்டினராகலின். கொடுங் காய் என்பது பெயர். வரி அடை" என விளக்கம் எழுதினார்.

இவற்றுள் 'வாள்வரி' என்பதினும், 'வால்வரி' என்பதே பொருந்திய பாடமாகும். 'வால்' என்பது வெண்மை, தூய்மை முதலிய பல பொருள் தரும் ஒரு சொல். இங்கு வெண்மைப் பொருளில் வந்தது.

வெண் சங்க வண்ணனை பலதேவனை 'வால்வளை மேனி வாலியோன்' என்றும், மிக வெண்ணிறச் சங்கினை 'வால் வெண் சங்கு' என்றும், பனையின் குருத்தோலையால் செய்யப் பெற்ற வெண்ணிறத் தடுக்கினை,

> "தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்
> கைவன் மகடூஉ கவின்பெறப் புனைந்த
> செய்வினைத் தவிசு"

என்றும் இளங்கோவடிகள் இயம்பினார். இறைவன் 'நரை வெள்ளேற்றை', 'வால் வெள்ளேறு' (புறம்) என வண்ணித்துப் பாடினார் பெருந்தேவனார். கரையிலா அறிவின் இறைவனை, 'வாலறிவன்' என வழங்கினார் வள்ளுவனார். வாள் என்பது ஒளி என்னும் பொருள் உடையது. அது, வால் என்பது போல வெண்மை என்னும் பொருளை நேரே வழங்குவது அன்று.

ஆகலின் வாள்வரிக்காய் என்பதினும் வால் வரிக்காய் என்பதே பொருந்தும்.

வால் வரிக்காய் நாம் இந்நாளும் விரும்பித் தின்னும் 'வெள்வரிக்காயே' ஆகும். இதனைத் தவருகவெள்ளரிக்காய் என்றே பேச்சிலும் எழுத்திலும் பயில வழங்குகின்ரேம். வெள்ளரி என்பதன் பொருள் வேறு; வெள்வரி என்பதன் பொருள் வேறு. முன்னதில் 'அரி'யும் பின்னதில் 'வரி'யும் வருமொழிகள். வெள்வரிக்காயில் வரி உண்டேயன்றி அரி (இரேகை) அமைந்ததில்லை. இனி, வெள்ளரி என்பதற்கு, வெள்ளிய நிறத்தையுடைய தடிகளை (ஊன்துண்டுகளை) வெள்ளரி என்ருர்'' என்று ஆசிரியர் நச்சினுர்க்கினியர் எழுதுவதால் (மலைபடுகடாம். 465) 'வெள்வரி' என்பதே பொருந்தும் என்ப துணரலாம்.

பிழைபட வழங்கும் 'வெள்ளரிக்காய்' என்பதை, முக்கூட்டுச் சொல்லாகக் கொண்டு இரட்டுற மொழிந்தார் ஒருவர் காய்கறி விற்கும் ஒருத்திக்குக் காதலன் ஒருவன் இருந்தான். அவன் அவளை மிகக் காதலித்தான். ஆனல் அவள் ஒப்புதல் எளிதில் வாய்க்கவில்லை. அதனல் அவள் வைத்திருக்கும் மிளகாய், சுரைக்காய், வெள்ளரிக்காய். அவரைக்காய் என்பவற்றைக்கொண்டு உரையாடத் தொடங்கினன்.

> ''உள்ள மிளகாயா? ஒருபேச் சுரைக்காயா?
> வெள்ளரிக் காயா? விரும்பு மவரைக் காயா?''

'உள்ள மிளகாயா?' என்னும் வினவுடன் 'உள்ளம் இளகாயா?' எனத் தன் விருப்பைத் தெரிவித்தான். 'ஒருபேச் சுரைக்காயா?' (பேய்ச்சுரை, சுரையுள் ஒருவகை) என மீண்டும் வினவி, 'ஒரு பேச்சு உரைக்காயா?' எனத் தன் வேட்கையைத் தொடுத்தான். அதற்குச் சிறிதும் அசையாது கற்றூண் போல் இருந்தமையால் ''வெள்ளரிக்காயா?'' என்ருன். வெள் அரி (நரசிங்கம்) க்கு ஆய் (தாய்) தூண்தானே! அதற்கும் அவள் பதில் உரைக்காமையால், 'விரும்புமவரைக் காயாதே' என மன்ருடினன். வெள்வரிக்காய் வெள்ளரிக்காயென மாற்ற முற்றமையால் - மாற்றியமையால் அமைந்த சொற்சிலம்பம் இஃதாகும்.

> ''மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை''

என்று அழுத்தமாக முழுமுதல் இலக்கண ஆசான் மொழிந்தும் உலக வழக்கன்றிச் செய்யுள்வழக்கிலும் மரபுநிலை திரிதல் ஆயது. இதனைக் கருதிக் கடனுற்றுவது மொழி நலம் பேணுவார் முழுக்கடனும்.

———

பாப்பரணை

(ஒரு சொல் வழக்கு ஆராய்ச்சி)

[பி. எல். சாமி, பி.எஸ்ஸி.,]

அரணை என்பது ஊர்வனவற்றைச் சேர்ந்த உயிராகும். அரணை ஓணான், பல்லி போன்ற ஊர்வன வகையைச் சேர்ந்த தாகும். அரணையின் குட்டியைத் தமிழ் நாட்டில் சில பகுதி களில் பாப்பரணை என்று பாமர மக்கள் அழைப்பதைக் கேட் டிருக்கின்றேன். அரணையின் குட்டி நீண்ட சிவந்த வாலுடைய தாகும். தமிழ் இலக்கியத்தில் பிற்காலத்தில் வருண வேறுபாடு கூறப்பட்டது. தமிழ் இலக்கணத்தில் எழுத்து, பாக்கள் ஆகிய வற்றிற்கும்கூட வருண வேறுபாடு கூறப்பட்டது. பாம்புகளில் பிராமண, அரச, வைசிய சாதிகள் எவை எனச் சிந்தாமணி கூறி யுள்ளது. தமிழ் நாட்டில் பேச்சு வழக்கிலும் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் வருண வேறுபாடு வழங்குவதைக் காணலாம். தலை வெளுத்து, உடல் சிவந்த கழுகைப் பிராமணக் கழுகென்று (Brahminy Kite) கூறினர். இந்தக் கழுகைத் திருமால் ஊர்ந்து வரும் கழுகாகக் கொண்டனர். கருநிற முடைய கழுகைப் பறைக் கழுகு (Pariah Kite) என்று அழைத்தனர். வெண்மை கலந்த ஒருவகை மைனாவை (Brahminy Myna) பாப்பார மைனா என்று அழைக்கின்றனர். தெலுங்கு மொழியில் 'பாப்பனச் சிலுவா' (பார்ப்பனக் கிளுவை) என்று ஒருவகை காட்டு வாத்து அழைக்கப்படுகின்றது. இப் பெயர்கள் பறவை நூலிலும் வழங்குகின்றன. பறைநாய் என்றழைக்கும் வழக்கும் உள்ளது. சாதி அடிப்படையில் வழங்கிய இவ்வழக்கு ஆங்கில மொழியிலும் பரவலாக வழங்கி வருகின்றது. பறைநாய் என்ற பெயரை ஒருவகை நாயினத்திற்கு விலங்கு நூலார் வழங்கு வதைக் காணலாம் பிரமா மாடு (பிராமண மாடு) என்ற பெயர் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்குச் சென்று பரவிய இந்திய மாட்டினத்திற்குப் பெயராக வழங்குகின்றது.

இந்த வழக்குகள் போன்றே பாப்பாரணை என்ற பேச்சு வழக்கும் பார்ப்பன அரணை என்ற பெயரிலிருந்து மாறியதாகத் தெரிகின்றது பிராமணனைப் பார்ப்பான், பாப்பான் என்று பேச்சு வழக்கில் கூறுவது பழக்கமானது. பாப்பு என்ற சொல்லே பிற்காலத்திய தனிப்பாடல் செய்யுளொன்றில் பார்ப்பன சாதி யைக் குறித்து வந்துள்ளது பாப்பு அரணை என்பதே பாப் பரணையென்று மக்களின் பேச்சில் வழங்குகின்றது. ஆனால்

இதில் வியப்புக்குரிய தென்னவென்றால் வால்மீகி இராமாயணத்தில் இதே பெயர் அரணையைக் குறித்து வழங்குவதாகும். வால்மீகி ஒரு செய்யுளில் 'பிராமணி' (Brahminy) என்ற பெயரால் அரணையை அழைத்துள்ளார். இந்தப் பெயர் வடமொழியில் வேறெந்த நூலிலும் வழங்காததென்றும் மிகவும் அரிய வழக்கென்றும் வால்மீகி இராமாயணத்தில் சொல்லாராய்ச்சி செய்த *சத்தியவிரத் என்ற பேராசிரியர் எழுதியுள்ளார். அண்மையில் வெளிவந்த நூலில் இந்தப் பெயர் நாட்டு வழக்கிலிருந்து வால்மீகியால் எடுத்துக் கொள்ளப்பட்டதாக இருக்கும் என்று இந்த ஆசிரியர் கூறியுள்ளார். இந்த நூலிற்கு டாக்டர் சுனிதிகுமார் சட்டர்ஜி முகவுரை கொடுத்துள்ளார். பிராமணி என்ற வடமொழிப் பெயருக்குக் கூறிய உரையில் இதற்கு இரத்தபுச்சம் இருப்பதாக, அஃதாவது இரத்த நிறமுடைய வால் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அரணையின் குட்டிக்கே இத்தகைய வாலிருப்பதைப் பார்த்திருக்கலாம். பெரிய அரணைக்கு இந்த வகையான வால் இருப்பதில்லை. தமிழ்நாட்டு வழக்கிலும் பெரிய அரணையைப் பாப்பரணை என்றழைப்பதில்லை. அரணையின் குட்டியையே பாப்பரணை என்றழைக்கின்றனர். வால்மீகி இராமாயணத்தில் இதே செய்யுள் வரியில் அரணைக்கு நஞ்சு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரணையின் நஞ்சைக் குறிக்க 'கறக' என்ற சொல் இவ்விடத்தில் வந்துள்ளது இந்தச் சொல்லும் அரிய சொல்லாட்சியென்று அதே பேராசிரியர் கூறியுள்ளார். நஞ்சைக் குறித்து வந்த இந்தச் சொல் பிற நூல்களில் வழங்கவில்லை என்றும் கூறியுள்ளார். ஆனால் இந்தச் சொல் தமிழில் நஞ்சென்ற பொருளில் 'கறை' என்று வழங்கியுள்ளதைக் காணலாம். தேவாரத்திலே 'கறைமிடற்று அண்ணல்' என்ற வரியில் கறை நஞ்சைக் குறிக்கின்றது. தெலுங்கு, மலையாள மொழிகளில் இச் சொல் நஞ்சைக் குறித்து வழங்குகின்றது. 'அரணை கடித்தால் உடனே மரணம்' என்று நாட்டு மக்கள் சொல்வதைக் கேட்டிருக்கலாம். அரணைக்குக் கொடிய நஞ்சு இருக்கின்றது என்ற தவறான கருத்து பாமர மக்களிடையே உள்ளது. அரணை கடிக்கவும் செய்யாது. கடித்தாலும் நஞ்சு கிடையாது. சாவு நிகழாது. ஆனால் அரணையும் பல்லியும் உணவில் விழுந்து கலந்தால் அந்த உணவு கொடிய நஞ்சாகும். அரணை நஞ்சுடையதென்று தமிழ் நாட்டில் கொண்ட கருத்தை வால்மீகி இராமாயணத்தில் காண்கிறோம். அரணையைப் பற்றிய இந்தப் பெயர் வழக்கும் கருத்தும் தென்னாட்டிலிருந்து வால்மீகி இராமா

* The Ramayana - A Linguistic Study.

யணத்தினுள் புகுந்தது என்று கருத இடமுண்டு. தென்னாட்டில் எழுதப்பட்ட, படியெடுக்கப்பட்ட வால்மீகி இராமாயணங்கள் (Ramayana recensions) உண்டு என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். வால்மீகி இராமாயணம் எழுத்தில் கொண்டு வரப்பட்ட காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டு என்று அறிஞர்கள் கருதுகின்றனர். வால்மீகி இராமாயணத்தில் வட நாட்டில் வளராத, காணப்படாத மரங்கள் சில கூறப்பட்டுள்ளதை அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த மரங்களுக்குத் தென்னாட்டுப் பெயர்களையே வால்மீகி இராமாயணத்தில் காண்பது குறிப்பிடத் தக்கதாகும். சங்க நூலில் கூறப்பட்டுள்ள கோங்கு மரம் வால்மீகி இராமாயணத்தில் 'கோங்கெலி' என்று கூறப்பட்டுள்ளது கோங்கிலவ மரம் என்பது தமிழில் பேச்சு வழக்கில் வழங்கும் பெயராகும். நந்தி என்ற மரப்பெயர் கன்னடத்திலும், தமிழிலும் வழங்குகின்றது. இப்பெயரையும் வால்மீகி இராமாயணத்தில் காணலாம். வால்மீகி கூறியுள்ள திலகம் என்ற மரம் தமிழில் குறிஞ்சிப் பாட்டிலும், பேச்சு வழக்கிலும் உள்ளது. தமிழில் பேச்சு வழக்கில் வழங்கிய 'பாப்பரணை' என்ற வழக்குச் சொல்லே வால்மீகி இராமாயணத்திலும் புகுந்தது என்று கருதலாம். வால்மீகி இராமாயணத்தில் இருந்த வழக்கை வடமொழி யறியாத தமிழ் நாட்டுப் பாமர மக்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்தினர் என்று கூறமுடியாது. இதே வழக்கு அரணையைக் குறித்து இந்தி மொழியிலும் பாமணி (பிராமணி) என்று பேச்சு வழக்கில் வழங்குவதாக இதே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

சில மரங்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் திராவிட மொழிப் பெயர்களுக்கும், இந்தி, மராத்தி முதலிய மொழிப் பெயர்களுக்கும் நெருங்கிய ஒற்றுமையைக் காண்கிறோம். திராவிட மொழிப் பெயர்கள் தொன்றுதொட்டு வடநாட்டில் வழங்கியதனால் அவற்றை மொழி பெயர்த்துக் கொண்டனர் என்று தெரிகின்றது. பாலை என்ற திணை தமிழில் பாலை மரத்தின் அடிப்படையாகப் பெயர் பெற்றது. பாலை என்ற மரப் பெயர் இந்த மரத்தில் வடியும் பாலின் அடிப்படையாகத் தோன்றியது. தமிழில் பல பாலை மரங்களும், செடிகளும் உள்ளன. வட்டப் பாலை, சதுரப் பாலை, ஆயப்பாலை, குடசப் பாலை, வெட்பாலை என்று பல பாலை மரங்கள் உள்ளன. வெட்பாலை (Wrightia Tinctoria) என்பதே சங்க நூல்களில் கூறப்பட்ட பாலை மரமாகும். அண்மையில் செக்நாட்டு அறிஞர் கமீல் சுவலெபில் வெளியிட்ட 'முருகன் புன்னகை' (The Smile of Murugan) என்ற நூலில் சங்க காலத்துப் பாலை மரத்தை

மகுடமரமென்று ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அதுபோல அர்ச்சுன மரமென்று சங்க காலத்து மருத மரத்தைக் குறித்துள்ளார். இவை தவறு என்பதை நான் எழுதிய செடி நூல் விளக்கத்தில் தெரிந்து கொள்ளலாம். மகுட மரத்தை மலையாளத்தில் வல்லிய பாலை என்று அழைப்பர். இறைஞ்சிப் பாலை யென்றும் அழைப்பர். ஏழிலைப் பாலை என்ற மரம் தமிழிலும் மலையாளத்திலும் சொல்லப்பட்டுள்ளது. பாலை என்ற பெயர் பெற்ற இந்த மரங்களுக்கும், செடிகளுக்கும் பால் இருப்பதைக் கவனிக்கலாம். ஆனால் இதே பாலை மரங்களுக்கு இந்தி, மராத்தி முதலிய வடநாட்டு மொழிகளில் பாலை என்ற பொருளைத் தரும் பெயர்களான தூதி, கிரணி, சீரிகா (Dudhi Khirni Kshirika) என்ற பெயர்கள் வழங்குவதை நோக்க வேண்டும். இப் பெயர்கள் பழங்காலத்தில் அங்கே வழங்கிய திராவிட மொழிப் பெயரான பாலையின் மொழி பெயர்ப்பாகவே தெரிகின்றது. பறவைகளின் பெயர்களிலும் இந்த ஒப்புமையைக் காண்கிறோம். குருட்டுக் கொக்கு என்ற பெயர் ஒரு வகைக் கொக்கிற்குத் தமிழ் நாட்டில் வழங்குகின்றது. இந்தக் கொக்கே சங்க நூல்களில் வழங்கிய உண்மையான கொக்காகும். மனிதரால் கண்டு கொள்ளாதபடி சூழ்நிலையில் மறையும் இக் கொக்கை மனிதரின் கண்களைக் குருடாக்கும் கொக்கு என்று பெயரிட்டது பொருத்தமே.

திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழில் பகழிக்கூத்தர், 'குருடுபெடை' என்று இந்தக் கொக்கைக் குறிப்பிட்டுள்ளார். இந்தி மொழியிலும் இந்தக் கொக்கை 'ஆந்த பாக்ளா' என்று குருட்டுக்கொக்கு என்ற பொருளில் அழைக்கின்றனர். நத்தைக் குத்தி நாரை என்றொரு பெரிய நாரை தமிழ் நாட்டிலும் வட நாட்டிலும் வாழ்கின்றது. இந்த நாரை ஒரு வகையான பெரிய நத்தையை உடைத்து அதன் உள்ளே இருக்கும் ஊனைத் தின்னும். இதை 'நந்துநாரை' என்று பதிற்றுப் பத்து கூறுகின்றது. நத்தையைத் தின்னும் நாரை யென்பதை இப் பெயர் குறிக்கின்றது. இதே பொருளில் இன்று அசாமி, வங்காள மொழியில் இதே நாரையின் பெயர் 'சாமூக் பாங்கா' (நத்தைக்குத்தி) என்று வழங்குவதைக் காணலாம். தமிழிலிருந்து இந்த நாரையின் பெயர் அசாமி மொழிக்குச் சென்றது என்று கூறமுடியாது ஆனால் இந்தியா முழுவதும் இந்த நாரையையும் நத்தையையும் தொடர்பு படுத்திப் பண்டைக் காலத்தில் திராவிட மொழிப் பெயர்கள் வழங்கியிருக்க வேண்டும். அவற்றின் அடிப்படையில் அசாமி, வங்காள மொழிகளில் இப் பெயர்கள் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கின

என்றே கொள்ளவேண்டும். கீரிப் பிள்ளைக்கு வழங்கும் மூங்கா என்ற தொல்காப்பியப் பெயர் மராத்தியில் பேச்சு வழக்கில் வழங்குகின்றது.

புதியதாக வந்த ஒரு மொழி இனத்தினர் ஏற்கனவே தொன்றுதொட்டு வாழ்ந்த இனத்தினரிடையே வழங்கும் மரஞ் செடி, விலங்கு, பறவைப் பெயர்களை அப்படியே எடுத்துக் கொள்வதோ, மொழிபெயர்த்துக் கொள்வதோ இயற்கையில் நிகழக் கூடியதாகும். ஆரியர்கள் வட நாட்டில் பரவியபோது பல மரங்கள், விலங்குகள், பறவைகள் அவர்களுக்குப் புதியன வாக இருந்தன. ஆதலின் அவற்றின் பெயர்களை அப்போது அங்கே வாழ்ந்து வந்த மக்களிடம் தெரிந்து கொண்டனர். யானையைக் கண்டபோது அஃது ஆரியர்களுக்குப் புதியதாக இருந்தது. அதைக் கையுடைய விலங்கு என்ற காரணப் பெயரில் அழைத்தனர். இதையே பிற்காலத்தில் தமிழில் மொழி பெயர்த்து 'கைம்மா' என்றனர். முள் இலவ மரத்தை வடமொழியில் 'சால்மலி' என்றழைக்கின்றனர். இப் பெயர் முண்டா மொழியிலிருந்து எடுத்துக் கொண்டதாகும். இதே பிங்கலந்தை நிகண்டில் 'சால்மலி' என்று சொல்லப்பட்டிருப் பதைக் காணலாம். ஆனால் கோங்கிலவு மரத்தின் பெயரைத் திராவிட மொழியிலிருந்து எடுத்துக் கொண்டனர் இந்த முறையாகவே வால்மீகி இராமாயணத்தில் 'பிராமணி' என்ற அரணையின் பெயரும் தமிழிலிருந்து புகுந்ததாகக் கருத வேண்டும்.

கட்டுப்பாடின்மையால் வந்த வினை

"நாகரிகத்தாற் சிறந்த தமிழ், முன்னோர்கள் வழங்கிய செந்தமிழ் வழக்கிற்குச் சிறிதுங் கட்டுப்படாமல் தாந்தாம் விரும்பியபடியே தமிழ்ச் சொற்களைத் திரிபு படுத்தியும், வடசொற்களை ஏராளமாகக் கலந்து மாசுபடுத்தியும், வந்த தமிழ் மக்களன்றோ இப்போது தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவாம் முதலான பல்வேறு மொழிகளைப் பேசும் பல்வேறு இனத்தவர்களாய் ஒருவரை யொருவர் அறியாமலும் ஒருவரோடொருவர் அளவளாவுதற்கில்லாமலும் ஆங்காங்குத் தன்னந் தனியராய்ச் சிறு சிறு கூட்டத்தவராய் ஆரியர்களுக்கு அடிமைகளாய் வாழ்நாட் கழிக்கின்றனர்."

—மறைமலை யடிகளார்

(மறைமலை யடிகளார் உரைமணிக் கோவை, பக். 62)

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் ௬ அ௧ஆம் பக்கத் தொடர்ச்சி)

13. 'இசுலாமியர்' முன்னேற்றம்

1. இசுலாமியர்

தென்னாப்பிரிக்காவில் தமிழர் தொகையே மிகுதி. காந்தி வந்த பிறகு குஜராத்தியரும், மார்வாடிகளும் குவிந்தனர். இசுலாமியர் வினைத்திட்பத்தால் செல்வஞ் செழித்து மாளிகைகள் கட்டி வாடகைக்கு விட்டுப் பணம் குவிக்கின்றனர். இசுலாமியர் பெரும்பாலும் குஜராத்திலிருந்து வந்தவர்கள். அவர்களிடையே கூட்டுறவுண்டு. ஒரே சமயம், ஒரே குரான், ஒரே மசூதி, ஒரே அல்லா, ஒரே தொழுகை, ஒரே இனமாக அவர்கள் வாழுகிறார்கள். ஓர் இசுலாமியப் புலவரோ, இசைஞரோ, கவிஞரோ, நடிகரோ வந்தால் எல்லாரும் போற்றி முன்வந்து உதவுகின்றனர். அவர்களுக்கு வானளாவிய அடுக்குமாளிகைகளும், நீண்டகன்ற மன்றங்களும், நாடகக் கூடங்களும் உள்ளன. அத்தனையும் பணம்; உறையுள் உறையுள்ளாக வாடகைக்கு விட்டுப் பணம் கறக்கின்றனர். இசுலாமியர் மசூதி அழகாக அமைந்துள்ளது. ஆட்டுக்கறி முதல், பாட்டுக்கருவி வரை எல்லா வாணிகமும் அவர்கள் கையில் உள்ளன. பெரிய பெரிய சந்தைகள் ஐரோப்பிய வண்ணம் கட்டி, அங்கே சட்டை தொப்பி முதல் சவரக்கத்தி வரையில் அவர்கள் கடை விரித்து, பெரிய மின் விளம்பரம் செய்து பணம் குவிக்கிறார்கள். இவருள் M. L. சுல்தான் என்பவர் டர்பானில் பெரிய கல்லூரி நாட்டி நடத்துகிறார். இவர் பல மாணவருக்கு உண்ண உடுக்க இருக்க வசதி செய்து கல்வியை வளர்க்கிறார். இவரைச் சார்ந்த இசுலாமிய நண்பர் என்னை வரவேற்றனர். அனைவரும் அரபி, பார்சி, உர்து புலவர். குரானைக் கரைத்துக் குடித்தவர். ஐந்து நமாசுக்களையும் தவறாது செய்பவர். அல்லா-அன்பில் இல்லங் கொண்டவர். நம்மவர் அவர்களிடம் சமய வுணர்வைக் கற்க வேண்டும். நான் தங்கி யிருந்த வீடும் ஓர் இசுலாமியர் வீடே. வீட்டைச் சுற்றி இசுலாமியரே இருந்தனர். நாலடுக்கு வீடுகள் பத்துப் பதினைந்து சுற்றும் நிவந்து பொலிந்தன. அவை ஒரு சிறு குன்றின்மேல் எழுந்தன. உந்து வண்டிகள் பத்துப் பதினைந்து அங்கே வரிசையாகக் காணும். ஊர் முழுதும் உந்து வண்டிப் பவனியே !

நான் அங்கே யிருந்தபோது "ஈதுல் பிதர்" ரம்ஜான் பண்டிகை நடந்தன. காற்றெல்லாம் "பிஸ்மில்லா" முழக்கமே. நான் புலவர் கூட்டத்தில் இசுலாமையும் திருநெறிச் சைவத்தையும் ஆய்ந்து பேசினேன். நந் தமிழர், இந்தியர் இசுலாமின் சிறப்பையும், இசுலாமியரின் அன்புத் திட்பத்தையும், அந்தச் சமயம் எப்படிப் பரவியது அச் சமயத்தைச் சேர்ந்தவர் எவரும் பிற மதம் புகாததேன்? என்பதை அறிதல் வேண்டும். ஐந்தாறு வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன—இசுலாம் பற்றிப் பேசுதற்கு. இஸ்லாமிய மௌல்விகள் உருக்கமாகக் கேட்டனர். என் பேச்சு உருதுவிலும் ஆங்கிலத்திலும் நிகழ்ந்தது. தமிழில் சுருக்கி உரைக்கிறேன்.

நான் 1917-21. மசூதியிலேயே இருந்தேன். அப்துல்லா மௌல்வி எனக்குத் திருக்குரான் பாடம் சொன்னார். நான் முகம்மது ரஸூல் ஸல்லம் அவர்களின் வரலாற்றையும் திருக்குரான் கருத்தையும் பாடி பாரதசக்தியிற் சேர்த்தேன்.

முகம்மதுநபி கி. பி. 570இல் தோன்றி 62 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார். (கி. பி. 632) அவர் குழந்தையாயிருந்தபோதே பெற்றோரை இழந்து பாட்டனிடமும் மாமனிடமும் வளர்ந்தார். ஒட்டகம் மேய்த்தார். இயற்கையின் எழிலைக் கண்டு கண்டு எல்லையற்ற கடவுளருளை உணர்ந்தார். நண்பருக்கும் பண்பருக்கும் உரைத்தார்.

கடலினைக் காணீர்; ஈசன்
கருணையைக் காணீர் என்பார்
சுடரினைக் காணீர்; ஈசன்
சோதியைக் காணீர் என்பார்
இடமகல் வானைக் காணீர்
இறைவனின் விரிவைக் காணீர்
புடவியைக் காணீர்; ஈசன்
புலமையைக் காணீர் என்பார்.

அல்லா ஒருவனே; அல்லாவே எல்லாம்; அவனின்றி எவனுமில்லை; எதுவும் இல்லை' என்றறிந்து சொன்னார். இதைத்தான் திருநெறிச் சைவமும் வற்புறுத்துகிறது.

"ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி" என்று மாணிக்கவாசகர் முறையிடுகிறார். முகம்மது அருள் அறிவாளர். மலைக்குகையில் ஓக-ஒருமைகூடி இறையறிவு பெற்றவர். பெரியர் பின்னே பெருந்தகைப் பெண்மையுள்ளது. ("There is always a woman behind a great man") என்பது பழமொழி. முகம்மதுநபி என்று முதலில் வணங்கி இணங்கி இசுலாம்

தொண்டை மேற்கொண்டது கதீஜாபீபி தான்; இவரிடம் வாலிப முகம்மது வணிகப்பணி புரிந்தார். முகம்மதின் அழகும், அறிவும், அறநெறியும், அன்பும், ஆர்வமும் அவரை ஈர்த்தன. இருவரும் மணம் புரிந்துகொண்டு நிறை முறையான இல்லறம் நடத்தி நன்மக்களைப் பெற்றுப் பெருகி வாழ்ந்தனர். முகம்மது ஈராக்குகையில் தியானித்தபோது அவருள் அருள் இறங்கியது. அல்லாஹு அக்பர் (பெரியது கடவுள்) என்ற மந்திரம் இறங்கியது. திருக்குரான் எழுந்தது. முகம்மது தம் மறதியால் தம்மிழப்பால் நிலைப்பின்றி படுக்கையில் புரண்டதைக் கண்ட கதீஜா "நீர் நபி, ஆண்டவன் ஆள்; உம்முள் அவன் அருள் புகுந்தது; உமது உரையில் அருளே பேசுகிறது; உலகம் உய்யப் பேசும்" என்ருர்.

முகம்மது :

கதீஜா, ஜிபுரியல் (தேவதூதன்) மக்களுக்கு என்னுள்ளே எழும் கருத்தை உரைக்கக் கட்டளையிட்டான். ஆனுல், என் பேச்சை யார் கேட்பார்? யார் என்னைப் பின் பற்றுவார்?

கதீஜா :

"நபிநாயகமே நான் கேட்பேன், அறிவேன், பின்பற்றுவேன், உமக்குத் துணை புரிவேன், எழுந்திரும்; 'எல்லாவுயிர்க்கும் இறைவன் ஒருவனே' என்று வலியுறுத்தும்."

எழுந்தார் நபிநாயகம்—இயம்பிஞர் இறையொருமையை-இறைவனைப் பணிதலே இஸ்லாம்—இறையன்பில், இறை வணக்கமுடன் வாழ்வானே இஸ்லாமியன். இஸ்லாமே அமைதி தரும் என்று கி. பி. 610இல் அருளுரை தொடங்கிஞர். மூடக் கொள்கைகளைக் கண்டித்தார். தம்மையும் அப்துல்லா அல்லாவின் அடிமை என்ருர். "மீளா அடிமை உமக்கே ஆளாய்" என்கிருர் சுந்தரரும். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே எதையும் வைக்கக் கூடாது. கடவுள் கடவுளே; மனிதன் மனிதனே என்ற ஆண்டான் அடிமைத் திறம் இசுலாமியத்திற்கும் சைவத்திற்கும் பொதுவாகும். நாற்பததைந்து கோடி இசுலாமியரை ஒரே குலமாக வாழச்செய்தது இசுலாம்.

நமது சமயம் கெட்டது குருமார்களின் சுயநலக் கோட்டைகளால். மடத்திற்கு மடம் பிடிக்காது; சாமியாருக்குச் சாமியார் சரிவராது. எல்லாரும் ஓர் குலம் என்று பேசுகிருேம்; நாமக்காரரும் நீற்றுக்காரரும், கரிக்கோட்டுக்காரரும், ஒத்துப்போக மாட்டார்கள். கோயில்கள் பல, சாமியுருக்கள் பல, வழி

பாடுகள் பலவகை; குழுக்கள் பல, குருக்கள் பல—ஒற்றுமைக்கு வழியில்லாமல் நமது சமயம் அழிந்து கொண்டிருக்கிறது. கிறித்துவ ரெல்லாரும் ஞாயிறு அன்று வணக்கம் செலுத்துவர்; இசுலாமியர் வெள்ளிக்கிழமை குத்பா வணக்கம் செலுத்துவர். சூரியன் மேற்கே இறங்கும்போது இசுலாமியர் எவரும் துண்டை விரித்து—மெக்கா பக்கம் நோக்கி நமாசு செய்வார். அங்கே ஒருமைக்கு இடமுண்டு; இங்கே வன்மைக்கு மடமுண்டு. குருக்களோ புரோகிதனோ அங்கே இடை நிற்பதில்லை. கோவில் தொழுகையில் அரசனும் ஆண்டியும் ஒரே வரிசையில் நின்று தொழலாம். இந்தச் சாதி முன்னே, இன்னொரு சாதி பின்னே, பின்னொரு சாதி வெளியில் என்ற ஓரகமே இசுலாமில் இல்லை.

கார்லைல் முகம்மதை "அருள்வீறு பெற்ற தீர்க்கதரிசி" என்கிறார். சமயத்தையும் அரசியலையும் இணைத்து இசுலாமியக் குடியரசை மதீனத்திலே நாட்டினார் முகம்மது ஸல்லம். நமது இந்து சமயம் இந்தியாவுடன் சரி; அதிலும் ஆயிரம் பிரிவினைகள் உள்ளன. இசுலாமியர் அரேபியா, இரான், சிரியா, எகிப்து, அல்ஜீரியா, அபிஸீனியா, துருக்கி, அல்பீனியா, இராக், பாகிஸ்தான், இந்தியா, ஆஃப்கானிஸ்தானம் பலூஜிஸ்தானம், தாஷ்கண்டு, அஜர்பைஜான், ஏமன், மொராகோ, தூனிசியா, லிபியா, மலேசியா, இந்தாசியா, சீனம், ஜப்பான் யூகோஸ்லாவியா, லேபனன், சோவியத் ரஷ்யா—எங்கும் பரவிப் பொலிகிறது. ஓரிடம் "நாரேதக்பீர்" என்று கூவினால் உலகெங்கும் "அல்லாஹு அக்பர்" என்று முழங்கும். இந்த ஒருமைப் பாடுதான் முகம்மதுநபி நாயகம் செய்த அற்புதமாகும். மசூதிகளில் நூற்றுக்கணக்கான அன்பர் நமாசு செய்யும் அமைதியான காட்சியே காட்சி! மெக்காவிலும் மதீனத்திலும், அக்காவிலும், ஜும்மா மசூதியிலும் நடக்கும் தொழுகை கண்டு என் உள்ளம் துள்ளியது. அத்தகைய ஒருமை, அத்தகைய தொழுகை ஒழுங்கு நம் கோயில்களில் அமைவதென்றோ? டர்பான் சைவசித்தாந்த சங்கம் அவ்வாறு முறையாகத் தொழுகை நடத்துவது பெருமைக்கு உரியது.

குர்ரான் ஐந்து நடைமுறைகளை விதிக்கிறது; அவற்றை ஒவ்வொரு முசுலிமும் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்:

1. கடவுளுக்கே வணக்கம்; கடவுள் ஒன்றே.

2. ஐந்து தரம் தொழுகை ஒவ்வொரு நாளும் காபாபக்கம் பார்த்தே தொழவேண்டும். வெள்ளிதோறும் மசூதியில் தொழ வேண்டும்.

3. ரம்ஜான் விரதம் காத்துப் பகல் முழுதும் பட்டினி நோற்கவேண்டும். இந்தநாளிலேதான் திருக்குரான் விளக்கமானது.

4. எல்லாரும் ஏழையெளியவருக்கு, பக்கிரிகளுக்கு உணவு, உடை முதலியவற்றை உதவ வேண்டும். ஈகை இசுலாமின் வாகை யாகும்.

5. மெக்காவுக்கு (ஹஜ்ஜு) யாத்திரை செய்ய வேண்டும். இசுலாமியர் சூது, மது, பன்றிக்கறி-இவற்றை அறவே விலக்க வேண்டும்.

பாஸ்கல், அக்கினல் (St. Aquinas), அப்துல்பஹாய் போன்ற அறிஞர் நூல்களில் முகம்மதின் கருத்துக்கள் கலந்துள்ளன. முகம்மது 622இல் மெக்காவிலிருந்து பகைவருக்குத் தப்பி மதீனத்திற்கு ஓடி வெற்றி பெற்றார். 630 இல் மீண்டு மெக்காவை வென்றார். சிலைகளை அழித்தார்; மசூதி எழுப்பித் தொழுகை நடத்தினர்.

அவர் 23 ஆண்டுகள் அருளிய திருமொழிகள் திருக்குரானை உருக் கொண்டன. குரான் நான்கு பகுதிகள், 20 அதிகாரங்கள், 114 சூராக்கள், 6,247 ஆயத்துகள், 86,430 சொற்களைக் கொண்டது.

குரானின் சில பாசுரங்களைக் கொண்டு கீதை, திருக்குறள், திருமுறை, திருமந்திரங்களுடன் பொருத்தி விளக்கினேன். குரான் முதற் பாசுரத்தை மட்டும் விளக்கி யமைகிறேன்.

பிஸ்மில்லாஹர் ரஹ்மான் இற்றஹீம்

(In the name of Allah the merciful) கருணைக் கடவுளின் பெயரால்.

அல்ஹந்து லில்லாஹ ரப்பில் ஆலமீன்

(உலகிறைவனை அல்லாவுக்கே எல்லாப் புகழும்—All praise is due to Allah the Lord of worlds)

அர்ரஹ்மான் இற்றஹீம் ரப்பில் ஆலமீன்

(The beneficial, the merciful master of the day of requital—தீர்ப்புநாள் தலைவன், ஈகையும் இரக்கமும் மிக்கான்).

இய்யாக நபுதுவா (Thee do we serve—நாம் உனக்கே தொண்டர்)

இய்யாக நஸ்தையின் (Thee do we beseech for help—உன்னையே உதவி வேண்டுகிறோம்)

லா இலாஹி இல்லல்லா (அல்லாவினும் இறைவன் இல்லை—There is no god but Allah)

ஸுபான ரப்பிய்யால் அஃசீம் (பெரிய சாமிக்கே எல்லாச் சிறப்பும்—Glory to Lord, the Great)

இதைச் செய் அதைச் செய்யாதே—சமயப் பகைவரை ஒழி, சமய நண்பரை அன்புகொள். செய்வதெல்லாம் அல்லாவுக்கே படைத்துச் செய். தயவுடன் உதவு. ஈகை ஏற்றமளிக்கும். தொழுகை வழுவாதே, ஈமான் கொண்டவரெல்லாம் ஒரே இனம். அனைவரையும் அன்புடன் பேணு. நன்மை நன்மை தரும்'' என்பது திருக்குரான் பொன் மொழிகள்.

காலை மசூதிப் பக்கம் காதைத் திருப்புங்கள்—காலை மாலை அஃஜான் (Azan) அல்லாஹு அக்பர் (அல்லா பெரியசாமி) ஹையஅலாஸ் ஸலாத் (தொழுகைக்கு வருகவே) ஹையஅலால் ஃபலாஹ் (வெற்றி பெற வருகவே) என்று திக்கதிர அழைப்பு அதிரும். எல்லாரும் கிப்ளா (Qibla) (மெக்கா)வை நோக்கி வழிபாடு செலுத்தி பிஸ்மில்லா ஜபம் செய்வார்கள். நமக்கும் ஏராளமான அருட் பாடல்கள் உள்ளன; மந்திரங்கள் உள்ளன—வழிபட்டு, முறையிட்டு, ஜபித்தால் அருட்சக்தி வளரும், ஆற்றல் பெருகும், அறநலம் பொலியும்.

உலகமெலாம் உன்பெயரை ஓத வேண்டும்
உள்ளமெலாம் உன்கோயில் ஆக வேண்டும்
சலசலத்துத் தாவிவரும் அருவி போலுன்
சக்திநதி யெம்முள்ளே தழைக்க வேண்டும்
கலகமெலாம் தீர்ந்துமனக் கருணை கொண்டுன்
காவலிலே மாந்தரெலாம் வாழ வேண்டும்
இலகுபரா பரனேயுன் இரக்கத் தாலே
இன்னுலகம் பொன்னுலகென் றிலகச் செய்வாய்.

இவ்வாறு ரம்ஜான் நாட்களும், கிறிஸ்துமஸ் நாட்களும் எனக்குப் புதிய எழுச்சி தந்தன, புதிய நண்பரை ஈந்தன; புதிய கருத்தைப் பொழிந்தன. நமது சமயமும் இவ்வாறு ஒற்றுமையும் ஒழுங்கு முறையும் காத்து உலகச் சமயமாக வேண்டும். முயல்வோம், முன்செல்வோம், வெல்வோம், ஓம் சிவம் !

(தொடரும்

தமிழும் மலையாளமும்

[பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை]

திராவிட மொழிகளை மூவகையாக மொழி இயல் அறிஞர் பாகுபடுத்தியுள்ளனர். அவற்றுள், நம் தமிழ் மொழியைத் தென் திராவிடமொழிக் குழுவில் சேர்த்துள்ளனர். தென் திராவிட மொழிகளுள் தமிழோடு மிகவும் நெருக்கமான உறவு உடையது மலையாளமொழி. இந்த உறவினை ஆராய்ந்த அறிஞர் பலர் மலையாளத்தினைத் தமிழின் கிளைமொழியாக-சேய்மொழியாகவே கருதியுள்ளனர்.[1] தங்கள் கருத்திற்குத் தக்க சான்றுகள் பலவற்றை அவர்கள் காட்டியுள்ளனர்.

---

1. Cundert, H: A Grammar of the Malayalam Language. 2nd ed; 1868; p. 1.

Caldwell, R: A Comparative Grammar of Dravidian Languages, Univ. of Madras, 1956: pp. 23 25, 143-4.

Srinivasa Aiyengar, M. Tamil studies, Madras, 1926; pp. 375-376.

Ramaswami Aiyar, L. V: The Evolution of Malayalam Morphology, Ernakulam, 1936. pp. 52-62.

Jules Bloch: The Grammatical Structure of Dravidian Languages, Poona, 1954; p. xxv.

Emenueau, M. B: The South Dravidian Languages, in the Procds. of the First International Conference Seminar of Tamil Studies, Vol II; IART, Kuala Lumpur, Malaysia 1966; pp. 564-65.

Kamil Zvelebil: Lectures on Historical Grammar of Tamil, Univ. of Madras, N. D; p. 30.

Krishnamurti, Bh: (1) Comparative Dravidian Studies, in Current Trends in Linguistics, Ed. Thomas A Selbeok, Vol 5; Mouton, Hague, 1969; pp. 365-366.

தமக்கையா?

ஆனால், சென்ற ஐம்பதாண்டுகளாக மலையாளமொழி ஆராய்ச்சியில் கேரளநாட்டுத் தோழர்கள் பேரீடுபாடு காட்டி வருகின்றனர். அவர்களுள் சிலர், 'தமிழைவிடப் பழமையானது மலையாளமொழி; மலையாள மொழியின் இயல்புகளில் பல பழைய தமிழில் காணப்படவில்லை. எனவே, தமிழிற்குத் தமக்கையாகவே மலையாள மொழியைக் கூறவேண்டும்' என்பர்.[1]

சிறப்பாக இராமசரிதம் என்னும் மலைநாட்டுத் தமிழ்மொழி நூலை, ஆராய்ந்த அறிஞர் தெரிவித்துள்ள கருத்துகளைக் காண்போம்:

(1) கேரளத்தில் வாழ்ந்து வந்த மக்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுவரை தமிழையே பேசிவந்தனர் என்றும், அந்தத் தமிழிலிருந்தே மலையாளம் பையப்பைய வளர்ச்சி அடைந்தது என்றும் கூறுவது உண்மைக்குமாறான செய்தியாகும். மலையாளம் தமிழிலிருந்து தோன்றியது என்பதற்கு வரலாற்றிலோ நிலநூலிலோ அடிப்படைச் சான்றுகள் கிடையா.[2]

---

		(2) Telugu Verbal Bases; 19 Comparative Study, Berkely, 1961; p. 48.
1.	George, K. M:	(1) Ramacaritram and the Study of Early Malayalam, National Book Stall, Kottayam, 1956, pp. 40-49.
		(2) A Survey of Malayalam literature Asia Publishing House, Bombay, 1968, pp. 4-6.
	Goda Varma, K:	Indo-Aryan Coau words in Malayalam, 1946, pp. 8-10.
	Pisharoti, A. K:	A Critical Study of Malayalam Language and literature 1927; pp 5-10.
	Govindan Kutty, A:	From Proto-Tamil-Malayalam to West Coast Dialects, in the Indo-Iranian Journal, Vol. xiv No. 1/2, Mouton, the Hague, 1972; pp. 52-60.
2.	George, K. M:	Ramacaritram, etc. p. 73.

(2) பழைய உறவுமுறை உருவகப் பெயரைப் போற்றிப் பின் பற்றினால், தாய்வீட்டினை மிகப் பழங்காலத்திலேயே விட்டு விலகிய குடும்ப உறுப்பினர்களுள், மலையாளம் ஒன்று என்று கூறலாம். இவ்வகையில், தமிழிற்கு மலையாளமொழி தமக்கை (Elder sister) யாகும். அவள் தனித்தும், புறக்கணிக்கப்பட்டும் வாழ்ந்து வந்தாள். அக்காலத்தில் தங்கையாகிய தமிழ், வாழ்வும் வளமும் பெற்றுச் செல்வாக்கு மிக்கவளாகச் சிறப் புற்றாள். எனவே, சில நூற்றாண்டு இடையீட்டுக்குப் பிறகு, அவர்கள் திரும்பச் சந்தித்தபொழுது, தங்கை இயற்கையாகவே உயர்ந்த நிலையையும், சிறப்பான இடத்தையும், போற்றத்தக்க தகுதியையும் பெற்றிருந்தாள்.

இத்தகைய ஆற்றல்மிகு இயல்புகளால் தமக்கையான மலையாள மொழியினைச் சிறப்பற்றவளாக அவள் செய்து விட்டாள்.......ஆயினும், பழைய தாயின் (மூலத்திராவிட மொழி யின்) சிறந்த பண்புகளை மிகச் சிறந்த முறையில் போற்றிக் காத்து வருபவளாக இருந்து வருபவள் இந்த மூத்த சகோதரியே ஆவாள்.[1]

வரலாறு உணர்த்தும் உண்மை

இக் கருத்துகளின் வன்மை மென்மைகளை இங்குக் காண்போம்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் சேர (கேரள) நாட்டில் தமிழ்மொழி பேசப்படவில்லை என்பது தமிழக வரலாற்றின் அடிப்படையை மாற்றமுயலும் செயலாகும்.

கி. பி. பத்தாம் நூற்றாண்டுவரை வடவேங்கடம் முதல் தென்குமரி வரையில் வழங்கிய மொழி, தமிழ் என்பதில் இதுவரை இருவேறு கருத்துகள் இருந்ததில்லை. கிழக்கிலும் மேற்கிலும் கடல்களே எல்லைகளாக இருந்து வந்தன. இந்த எல்லைகளில் உண்டான மாற்றத்தை முதன் முதலாக நன்னூலின் சிறப்புப்பாயிரம் சுட்டுகிறது :

> குணகடல் குமரி குடகம் வேங்கடம்
> எனும் நான்கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்
> (நன். சிறப்பு. 8-9)

என்னும் நூற்பாவில், தமிழ் வழங்கும் நாட்டிற்கு மேற்கு எல்லை யாகக் குடகுநாடு கூறப்பட்டுள்ளதைக் காண்க. இந்நூல்

1. Ibid. p. 75.

இயற்றப்பட்ட காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பது நினைவுகூரத் தக்கது.

எனவே, அக்காலத்திற்குச் சற்று முன்புதான் பண்டைச் சேர நாட்டில் தமிழின் கிளைமொழியாக மலையாளம் வழக்கிற்கு வரத்தொடங்கியது எனலாம். மற்றும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் அங்கு வழங்கிய மொழி, தமிழ்மொழி என்பதற்கு இலக்கிய-கல்வெட்டுச் சான்றுகள் பலவற்றை நாம் காட்டலாம். சேர நாட்டைச் சேர்ந்த சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய ஆதியுலாவும், வேணாட்டு அடிகளின் பதிகங்களும் தமிழில் இயற்றப்பட்டவை; வைணவ சமயத்துப் பெரியாரான குலசேகர ஆழ்வாரின் பாசுரங்கள் தமிழில் இயற்றப்படவில்லை என்று கூற முடியுமா? புறப்பொருள் வெண்பாமாலை இயற்றியவர் சேரர் குடியைச் சேர்ந்தவர் அன்றோ? அவர்கள் யாவரும் கி. பி. எட்டாம் நூற்றாண்டை ஒட்டி வாழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை.[1]

அன்றைய கேரளத்தின் ஆட்சிமொழியாகத் தமிழ் இருந்தது. எனவே, அரசப் புலவர்களான சேரமான் பெருமாள் நாயனாரும் குலசேகரரும் தமிழில் தங்கள் நூலை இயற்றினர் என்று கூறுவது[2] வரலாற்று உண்மைகளுக்கு முரணான செய்தியாகுமா? **'இராமசரிதம்'** என்னும் நூலினைத் **'தமிழில்'** இயற்றியுள்ளதாக அந்நூல் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கது:

ஆதி தேவனில் அமிழ்ந்த மனக் காம்புடைய
சிராமன் அன்பினொடு இயம்பின தமிழ்க்கவி
வெல்வோர் போதிய மாதின் இடமாவருடல்
வீழ்வதினு பின்போகி போக சயனன்
சரணதார் அணய்வரே[3]

என்று இராமசரிதத்தின் ஆசிரியர் அறிவித்துள்ளார். இந்நூலாசிரியன் காலம் கி. பி. பன்னிரண்டு அல்லது பதின்மூன்றும்

---

1. *வெள்ளைவாரணன், க:* பன்னிரு திருமுறை வரலாறு, பகுதி *2: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1969, பக். 630.*

இராசமாணிக்கனார், மா: *ஆழ்வார்கள் காலம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், மணலி, அறநிலையம், சென்னை, 1962: பக். 39.*

2. George, K. M: op. cit. pp. 45-46.

3. *இளையபெருமாள், மா:* (மொ. பெ.): *லீலாதிலகம், சென்னை, 1971, பக்.* vi.

நூற்றாண்டு ஆகலாம்[1] என்பது மலையாளமொழி அறிஞர் பலருக்கு உடன்பாடான கருத்தாகும்.

தொல்காப்பியர் காலத்திற்குமுன்பு இருந்தே தமிழ்மொழி, பல வட்டார மொழிகளாகத் திரிந்து வழங்கியதை நாம் அறிகிறோம்.

> *"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்*
> *தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"* (தொல். 883)

என்று தொல்காப்பிய நூற்பாவும்,

> *செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்*
> *ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்*
> *தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப.* (நன். 273)

என்று நன்னூல் நூற்பாவும் இதற்குச் சான்று பகருகின்றன.

எனவே, கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு அளவில்' தமிழ், பல வட்டார மொழிகளாக விளங்கியதில் வியப்பில்லை. அவ் வட்டார மொழிகளுள் சேரநாட்டுப் பகுதியில் வழங்கிய தமிழில் வட்டாரப் பேச்சுமொழியை இலக்கியத்தில் ஏற்றிய காரணத்தினாலும், வரம்பின்றி வடமொழியைப் பயன்படுத்தியமையாலும் அம்மொழி தமிழிலிருந்து சிதைந்தும் பிரிந்தும் ஒருவகைத் தனிநிலையை அடைந்தது. இந்த மொழியை **மலை நாட்டுத் தமிழ்** என்று லீலா திலகம் எனும் மலையாள மொழியின் மணிப்பிரவாள இலக்கணம் சுட்டுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[2] இந் நூல் கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்பர்.[3]

மலையாள மொழி ஆய்வாளர்களுள் ஒருவரான இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை போன்றவர்களும், கி. பி. எட்டாம் நூற்றாண்டு வரையில் தமிழே கேரளத்தின் உலக வழக்கு மொழியாகவும், செய்யுள் வழக்கு மொழியாகவும் இருந்துவந்ததாகக் கூறியுள்ளமையும் இக் கருத்தை அரண் செய்கிறது. இதிலிருந்து கி. பி. எட்டாம் நூற்றாண்டையொட்டியே அங்குத் தமிழின் சிதைந்த வட்டார வழக்குத் தோன்றத் தொடங்கியமை புலனாகிறது. (தொடரும்)

---

1. Ibid. பக். 1.
2. George, K. M : A Survey of Malayalam Literature p. 33.
3. Ibid. p. 4.

தமிழ்க் கலாசாலை சமற்கிருத கலாசாலையாகும் நிலை

சிதம்பரத்தில் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் தொடங்கிய 'நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை' நடைபெறுதலை யாவரும் அறிவர். அதனை நடத்தி வந்த நாவலரவர்களின் உறவினரும் மாணவருமான திரு பொன்னம்பலம் பிள்ளை 9—11—1918இல் முதுபெரும் புலவர் உ. வே. சாமிநாதையர் அவர்கட்கு எழுதிய கடிதத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு ஏற்பட்டு வரும் தீங்கினை மிக்க வருத்தத்துடன் குறிப்பிடுகின்றார். அதனை அடியிற் காண்க :

*"சங்க இலக்கியங்கள் முதலிய தமிழ் நூல்களின் அபி விருத்தியை உத்தேசித்து நாம் தொடங்கிய உயர்தரத் தமிழ்க் கலாசாலை கொஞ்சம் கொஞ்சமாகச் சமஸ்கிருத கலாசாலை ஆகப் பார்க்கிறது. தமிழ் வித்துவான்களும் தமிழ்ப் பாஷாபிமானி களாகிய தங்களை யொத்தவர்கள் இதில் ஒரு கவலை எடுத்துக் கொள்ளாவிட்டால் நாம் என்ன செய்யலாம். ஓரியண்டல் கலாசாலை யூனிவர்சிட்டியார் புதிய புதிய சமஸ்கிருத பாடங்களைக் கூட்டியும் யூனிவர்ஸிட்டிக் காலண்டரில் அவர்கள் முன்குறித்த பாடங்களை ஒவ்வொன்றாகக் குறைத்தும் ஒவ்வொரு உத்தரவு அனுப்பிக் கொண்டு வருகிறார்கள். அவைகள் தங்களுக்குத் தெரிந்திருக்கு மென்றெண்ணுகிறேன். இதுவரையும் தங்களுக்குத் தெரிந்திரா விட்டால் அவர்கள் அனுப்பிய காப்பிகளை அனுப்பி வைக்கிறேன். யூனிவர்ஸிட்டிக் காலண்டரோடு தங்கள் *குமாரரால் ஒப்பிட்டுப் பார்த்துத் தமிழ்ப் பாடங்களைக் குறைக்காமலும் சமஸ்கிருதப் பாடங்களை வரவரக் கூட்டாமலும் இருக்கத்தக்க ஏற்பாடு தாங்கள் தயைகூர்ந்து செய்தால் தமிழுலகத்திற்கு மிகுந்த உபகாரமா யிருக்கும்.*

திருவாதி (திருவையாறு) சமஸ்கிருத காலேஜ் முதலியவை களுக்குத் தமிழ்ப் பாடங்களை ஒவ்வொன்றாகக் குறைத்துச் சமஸ் கிருத பாடங்களைக் கூட்டிக்கொண்டு வரும் யூனிவர்ஸிட்டியார் நம்முடைய கலாசாலை முதலிய தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்காகத் தமிழை அதிகப்படுத்தக் கூடாதா? சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலியவாய் நாம் நடத்திய பாடங்கள் சிலவற்றை எடுத்தும் அளவைக் குறைத்தும் விட்டார்கள்."

தங்கள் பணிவுள்ள ஊழியன்

—ச. பொன்னம்பலவன்

1913இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பட்டதாரிகள் சேர்ந்து தமிழை அறவே பாடத்திட்டத்திலிருந்து நீக்கியுள்ளமை குறித்து நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த

* *சா. கலியாணசுந்தரமையர்.*

முதலியார் அவர்கள் கூட்டிய கண்டனக் கூட்டத்துக்குப் பேராசிரியர் செல்வக் கேசவராய முதலியார் அவர்கள் எழுதிய கடிதம் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 46 பரல் 11இல் காண்க.

பிறிதொரு மொழி பயிலாமல் தமிழ்மொழியிலேமட்டும் புலவர் பட்டமோ முதுகலைப் (எம். ஏ.) பட்டமோ பெற முடியாத நிலையினை நீக்கும்பொருட்டுப் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தமது கருத்துரையினைச் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு எழுதியனுப்பினார்கள். அதன்பேரில் முதுபெரும் புலவர் உ. வே. சாமிநாதையரவர்கள் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவில் செல்வாக்குள்ள பேராசிரியன்மார் சிலரிடம் தனித் தமிழில் பட்டம்பெறவரும் தீர்மானத்துக்கு ஆதரவு கொடுக் கும்படி சொன்ன செய்தியும் அந் தீர்மானத்தை ஒரு சிலர் எதிர்த்த போதிலும் தீர்மானம் நிறைவேறப்பெற்ற செய்தியும் பற்றிப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் 16-3-1926இல் முதுபெரும் புலவர் சாமிநாதையரவர்கட்கு எழுதிய கடிதம். செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 46 பரல் 3இல் வெளிவந்திருக் கின்றது.

மேலே குறிப்பிடப்பெற்ற செய்திகளிலிருந்து பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 1933 ஏப்ரல் 1, 2 இல் யாழ்ப் பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தின் 11ஆவது ஆண்டு நிறைவு விழாவில் தமது தலைமை யுரையில்,

> "தென்னிந்தியாவிலுள்ள பிராமணர் ஒரு வகுப்பாராகவே இருந்துகொண்டு தமிழைத் தாழ்த்தியடக்கியும் சமற்கிருதத்தை ஆதரித்துயர்த்தியும் வருகின்றனர் எனவும், சென்னை, அண்ணு மலை என்னும் இரு பல்கலைக் கழகங்களிலும் பிராமணர் வலுத்த கட்சியாயிருந்து அத்துணை பலமாகத் தமிழுக்குத் தடை செய்து வருவதால் தமிழர்கள் தங்கள் தாய்மொழியின் நிலையினை உயர்த்து வதற்கு ஒன்றுமே செய்துகொள்ளமுடியாதவராயிருக்கின்றனர் எனவும் பார்ப்பனர்களில் ஒருசிலர் தமிழுக்கு நீங்காத கடும் பகைவர்களாக இருக்கின்றனர் என்று சாமிநாதையரவர்கள் தம்மிடம் ஒருமுறை சொன்னார்கள் எனவும்"

உணர்ந்து வருந்திக் கூறியமை செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 47 பரல் 9இல் காண்க.

இன்றுங்கூட ஒரு வகுப்பினர் ஒல்லும் வாயெல்லாம் உடன் பிறந்தே கொல்லும் நோய்போல இந்திவழிச் சமற்கிருதத் துக்கு ஆக்கந் தேடித் தமிழுக்குத் தீங்கு புரிந்து வருகின்றனர் என்பது அறிதற்பாலது. —வ. சு.

தமிழ் பயிற்று மொழியாதற்கு எழுப்பும் போலித் தடைகள்

[கூகலூர் புலவர் முனியப்பன்]

கலைமகள் (மார்ச்சு 1974) இதழில் "எல்லாவற்றையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டுமா" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வந்துள்ளது. அதன் ஆசிரியர் தமிழ் பயிற்றுமொழியாதற்கு மாறான கருத்துக்களை மட்டும் கூறுபவர்களைத் தேடி அவர்களின் கருத்துக்களை அவ்விதழில் வெளியிட்டுள்ளனர்.

நீரினுள் இறங்கினாலன்றி நீந்த முடியாது. அதுபோல் தமிழ் பயிற்று மொழியானாலன்றி அறிவியல் மொழியாய் வளம் பெற்றுவிட முடியாது. ஆங்கிலத்தை அம்மக்கள் எல்லாவற்றிற்கும் பயன்படுத்தியதால்தான் அஃது அறிவியல் மொழியாய் வளர்ந்தது.

ஆங்கில மக்கள் வீட்டுக்கு ஒரு மொழி (தாய் மொழி), நாட்டுக்கு ஒரு மொழி (தேசிய மொழி), கல்விக்கு ஒரு மொழி, கடவுளுக்கு ஒரு மொழி என்றில்லாமல் எல்லாவற்றிற்கும் ஆங்கிலத்தையே பயன் படுத்தியதால் அது வளம் பெற்றது. மேலும் ஆங்கிலேயர் உலகின் பெரும்பகுதியை அடக்கி ஆண்டதால்தான் அஃது உலக மொழி என்னும் சிறப்பும் பெற்றது.

ஆங்கிலம் தோன்றியபோதே அறிவியல் மொழியாகவே தோன்றியதா ? அறிவியல் என்ற துறையே சில நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்றதுதான்.

மிகத் தொன்மை வாய்ந்த மொழிகளில் இன்றைய அறிவியல் வளர்க்கப்படவில்லை என்பதுதான் உண்மையேயன்றி அம்மொழிகள் அதற்குத் தக்கபடி வளம் பெறவில்லை என்பது அறிவுடையோர் கூற்றாகுமா ?

இதனை நன்குணர்ந்திருந்தும் தமிழுக்கு அத்தகைய ஆக்கம் வந்து விடக் கூடாதே என்பதற்காக "எல்லாவற்றையுமே தமிழில் கற்பிக்க வேண்டுமா" என்ற வினாவைத் தொடுக்கின்றனர்.

மேற்கூறிய வினாவிற்கு விடையளித்திருப்பவர் நால்வர் : (1) குமுகாய சேவகி திருவாட்டி சரோசினி வரதப்பன் அவர்கள் (2) விவேகானந்தர் கல்லூரி முதல்வர் திரு. என் வேங்கடசுப்பிரமணியன் அவர்கள் (3) இரண்டாம் ஆண்டு ஆங்கிலக் கலை முதுவர் (எம். ஏ.) படிக்கும் மாணவர் திரு. லீலாகுமார் அவர்கள் (4) பெற்றோர் சார்பில் திரு. ஆர். டி. இராசன் அவர்கள்.

பயிற்று மொழியாகப் பயன்படுத்தும் அளவிற்குத் தமிழ் வளம்பெறவில்லை என்று திருவாட்டியார் கூறுகிறார். 'மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்' என்ற மடிமை நிலையில் இருந்தால் எந்த மொழியும் வளம் பெறாது. மொழிக்குப் பயிற்சி மொழி நிலையும், ஆட்சிமொழி நிலையும் அளித்தால்தான் அது வளம் பெறும்.

தமிழ் மொழியில் பயின்றால் வெளியிடத்தில் வேலை கிடைக்காது என்பது ஒரு தடை.

இப்பொழுது மாநில வெறி அதிகமாகிப் பிற மாநிலங்களில் வேலை கிடைப்பது அரிதாக இருக்கிறது. பலர் விரட்டப்படுகின்றனர். கற்றவரும் கல்லாதவரும் விரட்டப்படுகின்றனர். சர்மனியரும், சப்பானியரும் தம் தாய்மொழி வழியிற் பயின்றே உலகில் முன்னணியில் நிற்கின்றனர். ஆதலால் பிறமொழிகளுக்கு அடிமைப்பட்டு நாம் உரிமையை இழந்து விடுதல் கூடாது. ஆங்கிலத்தில் கல்லாமையால் "வேலையில்லை"—என்று கூறுவோர் சிலர் இருப்பினும் அவர்கள் நாளடைவில் மறைந்து விடுவர்.

அடுத்தபடியாகத் "தமிழ்மொழியில் பயில்வோரின் தரம் அப்படியொன்றும் உயர்வாயில்லை" என்று அம்மையார் கூறுகின்றார். 'எப்படியென்று' அவர்கள் சொல்லவில்லை.

பெற்றோரின் பொறுப்பில் பேசுகின்ற திரு இராசன் அவர்கள் இதற்குத் துணைபோல் தோன்றும் ஒன்றைக் கூறுகின்றார்.

அஃதாவது: அவரிடம் நேர்முகத் தேர்விற்கு வந்தவர்களில் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்த ஒருவரிடமும் (இவர் பள்ளியிறுதி வகுப்பு வரை படித்தவர்) தமிழிற் படித்துப் பட்டம் பெற்ற ஒருவரிடமும் கட்டுரை ஒன்று கொடுத்து எழுதச் சொன்னார் என்றும், ஆங்கிலத்திலேயே படித்தவர் தன்னம்பிக்கையுடன் எழுதினார் என்றும் தமிழில் படித்தவர் தயக்கத்துடன் எழுதினார் என்றும் கூறுகின்றார். எந்த மொழியில் கட்டுரை எழுதச் சொன்னார் என்பதை அவர் குறிப்பிடவில்லை. கட்டுரை எழுதுவதற்கு ஒருவருடைய தனிப்பட்ட திறமையும் காரணம் ஆகும் ஆதலால் மொழிதான் காரணம் என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்? தமிழில் எழுதச் சொல்லியிருந்தால் ஆங்கிலத்தில் படித்தவர் தடுமாறியும் இருப்பார்.

மாணவர் கூறுகிறார்:—"தமிழ் பயிற்றுமொழிக்கு ஆக்கும் கலைச் சொற்களை யெல்லாம் எளிதில் புரியுமாறு ஆக்க வேண்டும். தனித்தமிழா என்று அலைசக் கூடாது; இன்று வழங்கும் சொற்களை யெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும். பேருந்து போன்ற சொற்களை யெல்லாம் சிற்றூர் மக்கள் தெரிந்து கொள்வதற்குமுன் உலகம் எவ்வளவோ முன்னேறிவிடும்" என்று கூறுகிறார்.

இந்த மாணவர் பிறக்கும்போதே ஆங்கிலச் சொற்களையெல்லாம் தெளிவாக அறிந்து கொண்டுதான் பிறந்தார் போலும்! இல்லையெனில் தமிழர்கள் ஆங்கிலச் சொற்களைப் புரிந்து கொள்ளும் அளவிற்குத் தமிழைப் புரிந்து கொள்ள முடியாது என்று தயக்கமின்றிக் கூறுவாரா? பெற்றோர் பொறுப்பில் பேசிய திரு இராசன் அவர்களும் ஆங்கிலம் புரிவது போல் தமிழ் புரியவில்லை என்கிறார்.

இப்படி இவர்கள் 'தமிழ் பயிற்று மொழி ஆகுதல் தகாது' என்ற முதற் கருத்தில் முனைந்து நில்லாது; கலைச்சொற்கள் பற்றிய இரண்டாம் கருத்துக்கு இறங்கி வருவது ஏன்?

இவ்விடத்தில் தான் நாம் ஓர் உண்மையை நன்கு நோக்குதல் வேண்டும். இயன்ற அளவு தமிழ் பயிற்று மொழியாக வாராமல் இருக்கத் தடை செய்வோம். தடையை மீறித் தமிழ் பயிற்று மொழியாக

வந்து விடுமானால் அதில்உள்ள கலைச்சொற்களாவது தமிழாக இல்லாமல் செய்வோம் என்பதே இவர்களின் எண்ணம்.

அதனால்தான் ஆங்கிலம் புரிகிறது, தமிழ் புரியவில்லை என்ற தலை மாறான கூற்றுக்கள். புதிய சொற்கள் எல்லாம் எளிதாகப் புரிய வேண்டும் என்ற புலம்பல்கள். எளிது என்பது என்ன? எந்த ஒன்றையும் அறியாதவரையிலும் கடினந்தான். அறிந்தபின் எதுவும் எவருக்கும் எளிதாதல் இயல்பு.

அறிந்து கொள்ளும் ஆர்வமோ, முயற்சியோ இல்லாதார்க்கு எளிய சொல்லும் விளங்காது. எனவே, எளிமை என்ற போர்வைக்குள் இருந்துகொண்டு கலைச்சொற்கள் பற்றிக் கருத்துரைப்ப தெல்லாம் பிற மொழியைத் தமிழில் புகுத்த முனையும் முயற்சியே யன்றிப் புரியாமை யன்று—இவ்வுரை பொய்மையுமன்று.

அடுத்து, தமிழில் பயிற்றினால் ஆங்கிலம் இரண்டாந்தர மொழி யாகி விடும் என்கிறார் கல்லூரி முதல்வர். அவர் 'கவலை' இது. அப்படி யானால் தமிழ் மட்டும் இரண்டாந்தர மொழியாக ஆகலாம் போலும்.

இவருடைய கருத்துக்களில் ஆங்கிலம் தேவை என்பதை நாம் மறுக்க வில்லை. ஆனால், தமிழ் பயிற்று மொழியாகுமானால் ஆங்கிலத் தின் தரம் குறைந்து விடும் என்பது, உடலில் தோன்றிய நோய்க்கு உரிய மருத்துவத்தைச் செய்யாமல், உயிரையே மாற்றிவிடு என்று கூறுவதற்கு ஒப்பாகும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

கலப்பால் ஆங்கிலம் வளர்ந்துள்ளது. அதுபோல் தமிழிலும் செய்யவேண்டு மென்கிறார் மாணவர். கலப்பினால் ஆங்கிலம் வளர்ந் திருக்கலாம். ஆங்கிலத்தின் தன்மைகளெல்லாம் தமிழுக்குப் பொருந் தாது. அருமை மாணவர் ஆங்கிலத்தைக் கொண்டே எல்லா மொழி களையும் எடை யிடுகின்றார்; அது தவறு என்பதை அன்புடன் எடுத் துரைக்கின்றேன்.

தமிழ் பிறமொழியின் கலப்பால் தன் வளத்தை மட்டுமன்று, தான் தவழ்ந்த நிலத்தையும் இழந்திருக்கிறது. கலப்பால் தமிழ் இழப்பை யன்றி எப்பயனும் பெறவில்லை என்பதை மறைமலையடிகள், பாவாணர் நூல்களைப் பயின்று அறிக.

"இரண்டாயிரம் ஆண்டு பழமையென்று கூறும் தமிழ் (இதுகூடப் பிழை. இத்தனை ஆண்டென வரையறுக்க முடியாத தொல்பழமைத் தமிழ்) என்ன வளர்ந்திருக்கிறது? அறுநூறு ஆண்டு ஆங்கிலம் அருமையாய் வளர்ந்துள்ளது" என்கின்றார் அன்பு மாணவர். எதனைச் சான்றாகக் கொண்டு இதனைக் கூறினாரோ அறியோம்!

என்ன வளரவில்லை என்பதை எடுத்துக் காட்ட முடியுமா? ஏதோ தமிழில் உள்ளதை யெல்லாம் தலைகீழாக அறிந்தவரைப்போல் அவ் வினாவை விடுத்துள்ளார். என்ன வளரவில்லை என்பதை எடுத்து மொழியத் தொடங்கினால் அவரே அகப்பட்டுக் கொள்வார். தமிழ் (ஆட்சிமுறை)—பயிற்றுமொழி ஆவதற்கும் தடை கூறுபவர், தமிழில் எது இல்லை என்கிறாரோ, அது இதன் வழிதான் வளரவேண்டும்

என்பதை அறிந்திருப்பார் என்றே நினைக்கின்றேன். அதனால் தான் எதனையும் குறிப்பிடாமல் என்ன வளர்ந்திருக்கிறது?' என்கிறார்; அன்றெல்லாம் 'என்ன இருக்கிறது தமிழில்?' என்று கேட்டவரைப் போல.

சங்க இலக்கியத்திற்கு ஈடான இலக்கியம் படைக்கவில்லை என்கிறார் சால்புமிகு மாணவர். இதிலிருந்து, இன்றைய தமிழ் இலக்கியப் படைப்புக்களை இவர் அறியவில்லை என்பது நன்கு தெரிகிறது.

இன்று வாழும் பெருஞ்சித்திரனாரை உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றேன். இவர் சங்க இலக்கியத்திற்கு ஈடான சிறந்த இலக்கியங்களைப் படைத்துள்ளார். இனிமேலேனும்; காசுக்காகப் பாடும் 'கவிஞர்'களைப்பற்றி அறிந்திருப்பீர்கள்; பைந்தமிழுக்காகப் பாடுபடும் பாவலர்களையும் தெரிந்து கொள்ளுங்கள்.

மேலும், இவர் கூறிய முத்திரைக் கருத்தை மொழிந்து இதனை முடிப்போம். 'பயிற்சி மொழியால் தான் தமிழ் வளர்ச்சி யடையும் என்பது அரசியல்' என்கிறார்.

அரசியல் என்பது தனியாக எங்கோ வானத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது போலும்! தமிழ் பயிற்சி மொழிபற்றிய கருத்துக்கு மட்டும் அரசியல் போர்வை போர்த்தும் இவர் 'தேசிய'மொழிக்கு மட்டும் பரிந்து பேசியிருப்பது என்ன இயலோ!

பாங்கா யுரைத்த அப் பரிந்துரையையும் இங்குப் பார்ப்போம். "மாநிலக் குடிமகனுக்கே மாநிலத்தில் வேலை என்ற 'அபத்தக்' கிளர்ச்சி நடக்கிறதே. அதற்கும் தேசிய மொழியை எல்லோரும் படித்தால் ஒரு முடிவு ஏற்படும்."

ஐயோ! இரக்கத்திற்குரிய மாணவரே! தமிழ் பயிற்சி மொழி என்றவுடன் அது அரசியல் என ஆர்ப்பரித்த உங்களுக்கு, இந்தியைத் தேசிய மொழியாக 'ஏற்றுக்கொண்டு' படித்துவரும் (பெறறோரான திரு. இராசன் அவர்களின் கூற்றுப்படி 12 அகவைக்குள் நான்கு மொழிகள் படித்துவிடும்) மகாராட்டிரத்தில் தான் அக் கிளர்ச்சி பேராட்சி செலுத்துகிறது என்ற அரசியல் மட்டும் ஏன் தான் புரியவில்லை!

புரியாமல் போவதற்கென்ன இவர்களெல்லாம் பூங்குழந்தைகளா? புரிந்துதான் இவ்வாறு புரையுரை புகல்கின்றீர்கள் என்பதை அறிந்தேயிருக்கிறோம்.

இது போன்ற எத்துணை தடைக்கற்கள் வைக்கப்படினும் அவை யாவும் உடைக்கப்பட்டுத் தமிழ் பயிற்று மொழிக்குப் படிக்கற்களாகப் பயன் படுத்தப்பெறும் என்பதைப் பணிவன்புடன் கூறிக்கொள்கின்றேன்.

தமிழில் எழுதுவோம்

[ஆட்சிச்சொற் காவலர் கீ. இராமலிங்கனார் எம். ஏ.]

(முன்பரல் ௩௱௭௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

8. வகைக்கு ஒரு வரைவு

'மடலின் வகை பல' என்னும் சென்ற இயலில், அலுவலகங்களில் நடைபெறும் பல எழுத்து வேலைகளை ஓரளவு வகைப் படுத்திக் கூறினோம். அவை ஒவ்வொன்றின் இலக்கணத்தையும் ஒருவாறு, அவ் இயலில் கண்டோம். இவ் இயலில் அவைகளுக்கு எடுத்துக்காட்டாகவும், இலக்கியமாகவும் வகைக்கு ஒன்று பார்ப்போம்.

வரைவுகள், குறிப்புகள் (Drafts & Notes) என்னும் அலுவலக எழுது பணிகள் இரண்டில், அலுலகக் குறிப்புகளைப் பின்னர் வைத்துக்கொண்டு, முதலில், வரைவுகளை வரிசைப் படுத்தி எழுதுவோம்.

1. வரைவு வகைகள்

(அ) மேல் குறிப்பு (Endorsement)

EDUCATION DEPARTMENT

Office of the Dy. Inspector of Schools,
Arivanoor.

Endorsement No. 1079/74-5, *Dated* 5—4—1974

Forwarded to the Headmaster, Higher Elementary School, Padippoor, for very urgent remarks.

(sd) Kalai Arasu
Dy. Inspector of Schools

To,
The Head Master,
Higher Elementary School,
Padippoor.

கல்வித் துறை

பள்ளித் துணை ஆய்வர் அலுவலகம்,
அறிவனூர்.

மேல் குறிப்பு எண் 1079/74-5, தேதி 5—4—1974

படிப்பூர் உயர்துவக்கப்பள்ளித் தலைமை ஆசிரியரது மிக விரைவான குறிப்புரைக்கு அனுப்பலாகிறது.

(கை) கலையரசு,
பள்ளித் துணை ஆய்வர்.

பெறுநர் :
தலைமையாசிரியர்,
உயர் துவக்கப் பள்ளி,
படிப்பூர்.

---

(2)

COMMERCIAL TAX DEPARTMENT

Office of the Commercial Tax Officer,
Vaniga Puram.

Endorsement No. 5678/74-1/*B*, *Dated* 5—4—1974

Transferred to the Joint Commercial Tax Officer, Aga Vilaiyoor, for Suitable action.

(sd) Vari Nermayar,
Commercial Tax Officer.

To,
The Joint Commercial Tax Officer,
Aga Vilaiyoor.

வணிக வரித் துறை

வணிகவரி அலுவலர் அலுவலகம்,
வணிகபுரம்.

மேல் குறிப்பு எண் : 5678/74-1/ஆ, தேதி : 5—4—1974 :

பொருத்தமான நடவடிக்கைக்கு, அகவிளையூர் பிணை வணிகவரி அலுவலருக்கு மாற்றலாகிறது.

(கை) வரி நேர்மையர்,
வணிகவரி அலுவலர்.

பெறுநர் :
பிணை வணிக வரி அலுவலர்,
அகவிளையூர்.

---

(3)

................துறை

அலுவலகம் பெயர்,
ஊர்

மே. கு. எண் : தே :

(i)

நில வளனூர் துணை வேளாண் அலுவலரது முடிவுக்கு அனுப்பலாகிறது.

* Transmitted to the Dy. Agricultural Officer, Nilavalanoor for disposal

(கை)

அலுவல் பெயர்.

* Transmitted என்னும் சொல்லுக்கு நேரான தமிழ் 'ஊடனுப்பலாகிறது.' இது ஒத்த நிலையிலுள்ள, அல்லது கீழ்நிலையில் இல்லாத அலுவலகங்களுக்கு எழுதும்போது பயன்படும் சொல். எளிமைக்காக

'அனுப்பலாகிறது' என்னும் சொல்லையே பயன்படுத்துதல் சாலும் என்பது மரபு.

(ii)

வயலூர் வருவாய் ஆய்நர் அறியவும் பின்பற்றவும் தெரிவிக்கலாகிறது.

Communicated to the Revenue Inspector, Vayaloor for information and guidance

(கை)

பெறு:

(iii)

நாளடைவில் அறிக்கை அனுப்ப, தெருக்குடி கோட்டப்பொறிஞருக்கு அறிவிக்கலாகிறது.

Referred to the Divisional Engineer, Therukkudi for report in due course

(கை)

பெறு:

(iv)

தக்க நடவடிக்கைக்கு (for proper action)

(v)

தேவையான நடவடிக்கைக்கு (for necessary action)

(vi)

திருப்பலாகிறது (Returned)

(vii)

திருப்பி அனுப்பலாகிறது (Retransmitted)

(viii)

தவறி வந்தது (Mis-sent)

(ix)

அளிக்கலாகிறது (Furnished)

(x)

உரிய வழியாக (Through proper channel)

(xi)

சுற்றனுப்பலாகிறது (Circulated)

(ஆ) குறிப்பு மடல் (Memorandum)

R. C. No. dated

.........Collector's Office

*Memorandum (Memo)

Subject:
Reference:

Many Tahsildars have not sent their reports so for inspite of several reminders. They should personally attend to this matter and send their reports without further delay.

(By order)

(Sd)

To, Huzur Sharishtadar

The Defaulting Tahsildars

*Reference

ந. க. எண் :　　தே :

.... ஆட்சியர் அலுவலகம்

*குறிப்பு மடல் (கு. ம.)

பொருள் :

பார்வை :

சில தடவை நினைவூட்டியும், பல வட்டாட்சியர்கள் அவர்கள் அறிக்கைகளை இன்னும் அனுப்பவில்லை. நேரே கவனித்து, மேலும் தவக்கமின்றி அவர்கள் அறிக்கைகளை அனுப்ப வேண்டியது.

(ஆணைப்படி)

(கை)

பெறு :　　தலைமைப் பொறுப்பர்

தவறிய வட்டாட்சியர்களுக்கு

* இது ஒரு கேட்பு மடல்

GOVERNMENT OF TAMIL NADU

Rural Development and Local Administration Department

Memorandum No:　　Dated

Sub:

Ref:

A person who has passed the Account test for subordinate Officers parts I & II or Account Test for subordinate officers part I and Account test for the executive officers before the issue of these orders need not pass the Panchayat Development Account Test.

(Sd)

Dy. Secretary to Government.

To,

(True copy)

Forwarded - By order

(Sd)

Section Officer.

தமிழ்நாடு அரசு

ஊர் வளர்ச்சி உள் ஆட்சித்துறை

குறிப்பாணை எண் :　　தேதி :

பொருள் :

பார்வை :

சார் அலுவலர் கணக்குத் தேர்வு I, II பாகங்களும், அல்லது சார் அலுவலர் கணக்குத் தேர்வு பாகம் I ம் செயல் அலுவலர் கணக்குத் தேர்வும், இவ்வாணை பிறப்பதற்கு முன் தேறிய ஒருவர் ஊராட்சி வளர்ச்சிக் கணக்கு தேர்வு தேறத் தேவையில்லை.

(கை)

அரசுத் துணைச் செயலர்

பெறுநர்:

(நேர் படி)

ஆணைப்படி — அனுப்பலாகிறது

(கை)

பிரிவு அலுவலர்.

---

(3)

R. C. No. Dated :

Office
Place

CHARGE MEMO

Sub:

On complaints received and after preliminary enquiries made it is found that Thiru Mosadi an approved probationer in the Office Assistants, Cadre accepted a bribe of Rs. 100/- from Thiru Asadar of Iruttoor, as a reward for recommending an assignment of Government Poromboke Land in Survey No. extent

The following charge is therefore framed against him.

CHARGE

That Thiru Mosadi Office Assistant accepted a bribe of Rs. 100/ from Thiru Asadar of Iruttoor for recommending an assignment of Poromboke land to him.

He is directed to submit his explanation within seven days from the date of receipt of this memo why suitable disciplinary action should not be taken against him.

To

(Sd) Signature
Designation

ந. க. எண்: தே: அலுவலகம்
இடம்

குற்றச்சாட்டு கு. ம.

பொருள் :

வந்த குறை கூறல்களை முதற்படியாக ஆராய்ந்ததில், அலுவலக உதவியர், பணித் தொகுதிப் பிரிவில் தகுதிகாண் பருவம் இனிது முடித்த திரு மோசடி என்பவர், அரசு புறம்போக்கு அளவெண்..........பரப்பு நிலத்தை இருட்டூர் திரு. அசடருக்கு உரிமை செய்யப் பரிந்துரைப்பதற்குப் பரிசாக ரூ. 100/-பெற்றுக் கொண்டதாகத் தெரிகிறது.

பின் வரும் குற்றம் அவர்மீது சாட்டப்படுகிறது.

குற்றச்சாட்டு

அலுவலக உதவியர் திரு மோசடி, இருட்டூர், திரு அசடருக்குப் புறம்போக்கு நிலத்தை உரிமை செய்வதற்குப் பரிந்துரைக்க ரூ. 100/- கையூட்டுப் பெற்றார்.

அவர்மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு இந்த கு. ம. பெற்ற ஏழு நாளைக்குள் அவரது விளக்கத்தை அனுப்பக் கட்டளையிடப்படுகிறார்.

(கை) ஒப்பம்
அலுவல் பெயர்.

பெறு :

———

(இ) அலுவலக ஆணை

............Department

Office order No. *dated*

Sub :
Ref :

Consequent on return to duty from leave by Selvi Muzhu Nila Superintendent, Selvi Vin meen, Asst. Superintendent is reverted as assistant with effect from 6-4-1974

(Sd)
Designation

To,
The Individuals concerned
Copy to, Accounts Section

(True copy)
Forward By order
(Sd)

அலுவலக ஆணை எண் : தே :

பொருள் :
பார்வை :

கண்காணிப்பாளர் செல்வி மு. முழுநிலா விடுப்பிலிருந்து பணிக்குத் திரும்பியதன் விளைவாக, மாற்றுக் கண்காணிப்பாளர் செல்வி விண்மீன் 6-4-74 முதல் உதவியர் பணிக்கு இடப் பெறுகிறார்.

(கை)
அலுவல் பெயர்

பெறு:
உரிய ஆள்களுக்கு
படி : கணக்குப் பிரிவு

(நேர்படி)
ஆணைப்படி அனுப்பலாகிறது
(கை)
அலுவல் பெயர்

———

(ஈ) நேர்முக மடல் (Demi Official Letter)

(நே. மு. D. O.)

Selvi : Pork Kodi I. A. S., ...Department
Dy. Secretary to Govt. Fort St. Valluvar

D. O. Letter No. *dated*

My Dear Ezhil,

Sub :

Ref :

I am to invite reference to the communication cited and to request you to send your reply by return of post.

Yours Sincerly
Pork Kodi

To,

Selvi Ezhil, I. A. S.
Designation
Place.

செல்வி. பொற்கொடி இ. ஆ. சே. ....துறை
அரசுத் துணைச் செயலர் தூய வள்ளுவர் கோட்டை
சென்னை.

நே. மு. மடல் எண் : தே :

என் இனிய எழில் !

பொருள் :

பார்வை :

**செப்பிய மடலைக் காணக் கோரும் கடமையுடையேன். மறு அஞ்சலில் உங்கள் விடையை அனுப்ப வேண்டுகிறேன்.*

தங்கள் உண்மையுள்ள,
பொற்கொடி

பெறு :

செல்வி. எழில், இ. ஆ. சே.
அலுவல் பெயர்...
இடம்...

* *இத்தொடரைச் 'செப்பிய மடலைக் காண்க' என்றாலே சாலும்.* 'I am to invite' *என்னும் பகுதியையும் தமிழில் நேரே கூறக் கருதியே மேற்கண்டாங்கு வரையலாயிற்று.*

(உ) மடல் (Letter)

தமிழ்நாடு அரசு

வேளாண் துறை

மடல் எண் 101—அ—1/74-2

விடுநர் :

திரு. ஆ. பொன்னிலவன், இ. ஆ. சே.,
அரசு இணைச் செயலர் (Additional Secretary)
வேளாண் துறை, சென்னை-9.

பெறுநர் : அலுவல் பெயர்...
அலுவலகம்...
இடம்...

ஐய,

பொருள் :

பார்வை :

5-4-1974 ல் நடக்க இருந்த, உரம், பசுந்தாள் எரு, நகரக் கழிவு உர, உட்குழுவின் கூட்டம் 4-5-1974 பிற்பகல் 4 மணிக்குத் தள்ளி வைக்கப்பெற்றுள்ளது என்பதைக் கட்டளையின்படி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள
(கை)
அரசின் இணைச் செயலர்.

படி :

(ஊ) அலுவலகச் *செயல்முறை (Office Proceedings)

............மாவட்ட ஆட்சியரின் அலுவலகச் செயல்முறை

முன்னிலை : திரு : மாவளவன், இ. ஆ. சே, ஆட்சியர்

பொருள் :

பார்வை :

ஆணை :

x　x　x　x　x　x
x　x　x　x　x　x

(கை) மாவளவன்
ஆட்சியர்

(நேர் படி)

பெறுநர் :

*'Proceedings' என்பதற்கு 'நடவடிக்கை' என்னும் சொல் வழக்கத்திலிருக்கிறது. இது 'Conduct' என்னும் மாறான பொருளைத் தரா திருக்கும் பொருட்டே 'செயல்முறை' என்று எழுதலாயிற்று,

---

(எ) அரசாணை (Government Order)

தமிழ்நாடு அரசு

பொருள் சுருக்கம் (Abstract)

(நிலம் - உரிமை பெறல் ... ...ஏற்கலாயிற்று)

.....................துறை

அரசாணை எண் :　　　　தே :

பார்வை :

1. அரசின் குறிப்பு மடல் எண் : தேதி :

2. செவ்வயல் மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து மடல் எண் : தேதி :

ஆணை :

x x x x x x
x x x x x x

(கை) செம்மலர்
அரசுச் செயலர்

(ஏ) நினைவூட்டு (Reminder)

(1) குறிப்பு மடல் வாயிலாக

ந. க. எண் : தே : மாவட்டக் கல்வி அலுவலகம்,
ஊர் : ....

குறிப்பு மடல்

பொருள் :

பார்வை :

இரண்டு மாதம் ஆகியும், துணை ஆய்நரின் அறிக்கை இன்னும் இங்கு வரவில்லை உடனடியாக அறிக்கையை அனுப்புக.

(ஆணைப்படி)
(கை)
மா. க. அ. நேர்முக உதவியர்.

பெறு :
பள்ளித்துணை ஆய்நர்,
கல்விக்குடி.

---

ii நேர்முக மடல் வாயிலாக

திரு. பெயர் : அலுவலகம் :
அலுவல் : இடம் :
தேதி :

நே. மு. ம. எண் : தே :

பொருள் :

பார்வை :

அன்பார்ந்த பூங்கொடி :

x x x x x x
x x x x x x

உங்கள் உண்மையுள்ள
(கை)

பெறு :
செல்வி பூங்கொடி,
அலுவல் :
ஊர் :

---

iii மடல் வாயிலாக

.........துறை

விடுநர் : பெயர்........... பெறுநர் : அலுவல்...........
அலுவல்........... இடம்...........
இடம்...........

மடல் எண் : தே :

ஐய,

பொருள் :
பார்வை :

x x x x
x x x x

தங்கள் நம்பிக்கையுள்ள
(கை)
அலுவல்......

(ஐ) திரும்ப நினைவூட்டு

....துறை

நினைவூட்டுப் பகுதி	விடைப்பகுதி
பொருள் :	பொருள் :
என்ன நிலையிலுள்ளது?	இன்ன நிலையிலுள்ளது
விடை எப்போது வரும்?	விடை...........ல் வரும்
அலுவலகம்... (கை)	அலுவலகம் (கை)
அலுவல் பெயர்	தேதி : அலுவல் பெயர்.

(ஓ) அறிவிப்பு

ஏல அறிவிப்பு

இவ்வலுவலகத்திலுள்ள பின்கண்ட பழுதுபட்ட அறைகலன்கள் (Furniture Articles) 30-4-74 மாலை 4 மணிக்கு இவ்வலுவலக முற்றத்திலே எல்லோரும் அறிய ஏலம் விடப்பெறும். ஏலம் கேட்பவர்கள் முன் கூட்டியே, ரூ- /- பிணையம் கட்டித் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். உச்சக் கேள்வி கேட்பவர்க்கு ஏலம் விடப் பெற்றதும் அவர் முழுத் தொகையைக் கட்டிப் பொருள்களை அப்புறப் படுத்த வேண்டும்.

அறை கலன்கள்

1. ....
2. ....
3. ....

அலுவலகப் பெயர் :
இடம் : (கை)
தேதி : அலுவல் பெயர்.

(ஓ) அறிவிக்கை (Notification)

மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை

31-3-1974 ல் முடியும் காலாண்டில், கனிக்குடி மாவட்டத்தில் நிலவிய தானிய அங்காடி சராசரி விலைப்பட்டியல்

தமிழ்நாடு பயிரிடும் குடியானவர் (ஞாயக் குத்தகை கொடுப்பது) பற்றிய சட்டம் 1956-12 (1) பிரிவின்படி கனிக்குடி மாவட்டத்தில் 31-3 1974ல் முடியும் காலாண்டு காலத்தில் நிலவிய பின்வரும் உணவுத் தானியங்களின் விலை அறிவிக்கலாகிறது

தானியம்	எடை, விலை
1.	
2.	
3.	

(ஔ) அரசறிவிப்பு

மண்ணெண்ணெயைச் சில வணிகர்கள், குறித்த அளவுக்கு மேல் விலை வைத்து விற்பதாகக் குறை கூறப்படுகிறது. ஒரு லிட்டர் ரூ. /-க்கு மேல் விற்பது குற்றமாகும். அரசுக்குத் தெரிவித்தால், குற்றஞ் செய்தவர்கள் தண்டிக்கப்படுவர்.

II குறிப்புகள்

அலுவலகக் குறிப்பு

திரு. 10-4-74இல் விடுப்பில் இருந்து திரும்புகிறார். அவரை 'இ' பிரிவுக்கு இட்டுவிட்டு, அங்குள்ள திரு.................ஐ 'எ' பிரிவுக்கு மாற்றலாம். இவர் 'இ' பிரிவின் வேலையைச் சமாளிக்க முடியாமல், தாள்களைத் தேக்கிவிட்டிருக்கிறார். 'எ' பிரிவு சிறிது எளிதானது.

ஆணைக்கு.

*

எழுத்தரின்
சுருக்கொப்பம்.

உ. செ.
(உதவிச் செயலர்)

திரு..................தம் மகள் திருமணத்திற்குக் கடன் கேட்கிறார். இவர் நிலையான பணியாளர். ரூ. /- அளிக்க விதிகளில் இடமுண்டு. ....தவணைகளில் திருப்பிப் பெறலாம்.

முறை சாராக் குறிப்பு

x x x x x x
x x x x x x

விதித்துறையின் கருத்துக்கு மு. சா. குறிப்பாக அனுப்பலாம்

(தொடரும்)

செய்திகளும் குறிப்புகளும்

'சென்னைச் சிலைகளின் கதை' கழக நூலுக்குத் தமிழக அரசின் பரிசு

கழக நூலாசிரியரும், அரிய பொருள்களைச் சிறுவரும் படித்து இன்புறும் வகையில் எழுதும் ஆற்றல் பெற்ற குழந்தை இலக்கிய ஆசிரியருமான திரு. என் கே. வேலன் பி.ஏ. அவர்கள் எழுதிய 'சென்னைச் சிலைகளின் கதை' என்ற நூலினைப் பாராட்டி 23-11-1973 இல் தமிழக அரசு 500 வெண்பொற் காசுகளைப் பரிசாக வழங்கியுள்ளது என்பதை அன்பர்கட்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந் நூலாசிரியர் எழுதிய 'நிலவைச் சுற்றிய கதை' 'மின்சாரத்தின் கதை' ஆகிய நூல்கட்கும் தமிழக அரசு முன்னரே பரிசு வழங்கி உள்ளது என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணி சிலை திறப்பு விழா

3-4-74 இல் மகிபாலன்பட்டியில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களின் சிலை திறப்பு விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. விழாவிற்குச் செட்டிநாட்டரசர் இராசா சர் முத்தையா செட்டியார் அவர்கள் தலைமை ஏற்றார். டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இப்போது மகிபாலன்பட்டி என வழங்கப் பெறும் அவ்வூர் சங்க காலத்தில் பூங்குன்ற நாடு என வழங்கப்பட்டது. இப்பூங்குன்ற நாட்டில் வாழ்ந்த சங்க காலப் புலவர்தாம் கணியன்பூங்குன்றனார். எனவே, அவர் பாடிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் பொறிக்கப்பட்ட கல்வெட்டினையும் பண்டிதமணியவர்கள் திருவுருவச் சிலையினையுந் தமிழகமுதல்வர், டாக்டர், கலைஞர் கருணாநிதியவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு அமைச்சர் மாதவன் விழாமலரை வெளியிட்டார். குன்றக்குடியடிகளார், டாக்டர் வ. சுப. மாணிக்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

குலசை திரு ப. இராமநாத அடிகளின் இரண்டாம் ஆண்டு குருபூசை விழா

கழகப் புலவராகவும், சித்தாந்தப் பண்டிதராகவு மிருந்து தமிழ்த் தொண்டும் சிவத்தொண்டும் ஆற்றிவந்த அருள்மிகு குலசை திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள் இறையடி சேர்ந்த நாளாகிய பங்குனி மக நட்சத்திரம் 3-4-74 இல் வந்துற்றதை முன்னிட்டு அன்று மாலை 6-30 மணியளவில் சைதாப்பேட்டை காரணீசுவரர் திருக்கோயிலில், திரு. பிள்ளையவர்களின் மாணவர் சைவப்புலவர் திரு. மு. ந. மாசிலாமணி, R. I. M, P அவர்களால் குருபூசை விழா சிறப்பாக நடத்தப் பெற்றது. விழாவிற்குக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சைவத்திரு. குறளமுதம் க. வடிவேலாயுதம், எம். ஏ. அவர்கள் தலைமை தாங்கினார். அமுதமொழியரசு திரு, சங்கரநாராயணன், வித்துவான் அம்பை சங்கரனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கி. பி. 2000 இல் மக்கள் தொகை

இன்று உலகமக்கள் தொகை 380 கோடி. இன்னும் 25 ஆண்டுகளில் (அஃதாவது கி. பி. 2000, 760 கோடியாகும். அதன்படி இந்திய நாட்டிலே பீகார் போன்ற சில மாநிலங்களில் இப்போதுள்ள மக்கள்

தொகை இரு மடங்காகும். ஆனால் தமிழ் மாநிலத்தில் மட்டும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தினால் இப்போதிருக்கும் மக்கள் தொகை 4 கோடி. கி. பி. 2020 ஆம் ஆண்டிலேதான் 8 கோடியாகும் என்று பொருளாதார வல்லுநர்கள் மதிப்பிடுகின்றனர். அங்ஙனம் இருமடங்கானால் உண் பொருள் நிலை, குடிதண்ணீர் நிலை, போக்குவரவுகளின் நிலை, பல்வகைத் தொழிற்றுறைகள், கல்வி நிறுவனங்கள் முதலியன என்னவாயிருக்கும்? குடிதண்ணீருக்குக் கூடப் பங்கீடு ஏற்படும். அதற்கு இப்போதே நாம் என்ன செய்தல் வேண்டும் என்றின்னோரன்னவற்றை அமெரிக்கா, ருஷ்யா, சப்பான், செருமனி, பிரிட்டிசு முதலிய நாடுகளெல்லாம் ஆராயத் தொடங்கியுள்ளன. தமிழ்நாட்டு நிலையினை ஆராய்ந்தெழுதும் படி பொருளாதார நுண்கலைப்புலவர் மதிப்புமிகு டாக்டர் பா. நடராசனவர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர். முதற்கண் கி. பி. 2000 ஆண்டில் எவ்வாறிருக்கும் என்பதை ஆராய்ந்து முடிவெடுத்தனர். எப்போது மக்கள் தொகை இருமடங்காகுமோ அந்த ஆண்டுவரை ஆராய்ந்து முடிவெடுக்குமாறு மீண்டும் கேட்கப்பட்டிருப்பதால் அதற்கேற்ப ஆராய்ந்து வருகின்றனர்.

மக்கள் பெருக்கத்துக்குக் காரணம் பிறப்புவிழுக்காடு கூடுதலாகவும் இறப்புவிழுக்காடு குறைவாகவும் இருக்கின்றமையேயாகும். பிளேக், கக்கல் கழிச்சல் (காலரா), அம்மை, நச்சுக்காய்ச்சல் முதலிய உயிர்க் கொல்லி நோய்கள் மருந்துகளால் தடுக்கப் பெறுகின்றன. பெண் மக்களிற் பெரும்பாலோர் முதற் பேறு காலத்திலேயே தப்பிப் பிழைத்தல் அரிதாக இருந்தது. இப்போது அதனால் ஏற்படும் இறப்பு தடுக்கப் பெற்றுள்ளது.

ஆகவே பிறப்பு விழுக்காட்டினையும் இறப்பு விழுக்காட்டினையும் சமநிலைப்படுத்துதற்குரிய ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. அதிலே வெற்றி கண்டால் மட்டும் உலகில் மக்கள் வாழ்வு சிறுடையதாயிருக்கும். எனவே மக்களைப் படைக்கும் இறைவன் அதற்குரிய வழிவகைகளைக் காட்டி யருள்புரிவானாக!

விரைந்து படையெடுக்கிறது இந்தி!

கடந்த சில நாட்களாக இந்தியப் பேரரசினர் இந்தி மொழியை, இந்தி பேசாத மாநிலங்களில் எங்ஙனமெல்லாம் வலியத் திணிக்க இயலுமோ அங்ஙனமெல்லாம் திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நடுவண அரசு ஊழியர்கள் இந்தி ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளையும் பயன்படுத்தலாம் என்று அரசியல் சட்ட மொழிப் பிரிவில் கூறப்பட்டிருப்பினும், இந்திய மாநிலங்களுக்கிடையே கடிதப் போக்கு வரத்துக்களில் இந்தி மொழியே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் இந்தியை மேலும் பரப்பப் பல்வேறு முயற்சிகளில் அரசு ஈடு பட்டுள்ளது என்று இதற்குக் காரணம் கூறப்படுகிறது.

முன்னரே, 14 கோடி ரூபா இந்தி வளர்ச்சிக்கு ஒதுக்கிய நடுவண அரசு மேலும் 9 கோடியைச் சேர்த்து 23 கோடி ரூ. செலவழிக்கத் திட்ட மிட்டுள்ளது.

இந்தியால் இந்தி பேசாத மக்களுக்கு எதிர்காலத்தில் பேரிடர் காத்துக் கிடக்கிறது என்பது தெளிவாகிறது. இதிலிருந்து தப்ப இந்தி எதிர்ப்பு இயக்கம் மேலும் வலுப்படுத்தப்படவேண்டும். தமிழகம் இதற்கு வழிகாட்டியாக யிருந்து பிற இந்தி பேசாத மாநிலங்களுக்கு உண்மை நிலையை உணர்த்தவேண்டும்.

'நல்லாசிரியர்' விருதுபெற்ற புலவர்மணி தி. கி. சுந்தர மூர்த்தி அவர்கள்

நம் கழகப் பேரன்பரும், மாநாட்டு மலர்களில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியவரும், மதுரை மாவட்டத் தமிழாசிரியர் கழகத் தலைவருமான. புலவர் மணி, தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கட்குத் தமிழ்நாட்டு அரசு இந்த ஆண்டில் 'நல்லாசிரியர் விருது' வழங்கிச் சிறப்பித்துள்ள மகிழ்ச்சி தரும் செய்தியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

திரு. தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கள் மதுரைத் தியாகராசர் நன்முறை உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக முப்பது ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். பல ஆராய்ச்சி நூல்களும், தல வரலாறுகளும், மாணவர்கட்காகப் பல நூல்களும் உரைநூல் களும் எழுதியுள்ளார்.

இசைத்திறமும் சமய இலக்கியச் சொற்பொழிவாற்றும் திறமையும் மிக்கவர். நாட்டு விடுதலைக்காகச் சிறை சென்றவர்: அருள்நெறித் திருக்கூட்டம், மதுரைத் திருவள்ளுவர் கழகம், தமிழ்ச் சங்கம், தெய் வீகப் பேரவை முதலியவற்றுள் சிறப்புறுப்பினராகப் பணிபுரிபவர். இலங்கைக்குச் சென்று சமய இலக்கியச் சொற்பொழிவாற்றியுள்ளார். நம் கழகத்தின் கோவை, வெண்பா மாநாட்டு மலர்களில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிச் சொற்பொழி வாற்றியுள்ளார்.

தமிழுக்குத் தனி வாரியம்

தமிழக அரசுத் துறைகளுள் பல வாரியங்கள் உள்ளன. அது போல் தமிழ் மொழிக்கும் அதன் ஆக்கத்திற்கும் வழிகோலும் வகையில் ஒரு தனி வாரியம் ஏற்படுத்த வேண்டும் என்பது சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி அவர்களின் விருப்பம். இதனை அவர் அண்மையில் சட்ட மன்ற மேலவையில் பேசியபோது குறிப்பிட்டுள்ளார். இது மிக நல்ல கருத்து. எல்லாவற்றுக்கும் நிதி ஒதுக்குவதுபோல் தமிழுக்கென ஒரு வாரியமும் ஏற்படுத்தி அதற்கு நிதி ஒதுக்கப்படுமானால் தமிழ் மேலும் விரைந்து முன்னேறக் கூடும்.

கொத்தமங்கலம் சுப்பு மறைவு

கவிதை எழுதும் ஆற்றல் பெற்ற கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் தமது 63 ஆம் அகவையில் 15 2-74 இல் காலமானார் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். திரு. சுப்பு அவர்கள் இளமையில் பல தொழில்களில் ஈடுபட்ட போதிலும் அவர் உள்ளம் கலையுலகிலேயே நிலை பெற்றிருந் தது. அவர் ஒரு சிறந்த கவிஞராகவும், நாவலாசிரியராகவும், திரைப் பட இயக்குநராகவும் நடிகராகவும் இருந்து, கலையுலகிற்கு ஆற்றிய பணிகள் பெரிதும் பாராட்டத் தக்கவை. இவர் தம் கலைத்திறனைப் பாராட்டு முகத்தான் இந்தியப் பேரரசு 1971 இல் இவருக்கு 'பத்மஸ்ரீ' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்க செய்தியாகும். கவிஞர் சுப்பு அவர்கள் கலந்து கொள்ளாத கவியரங்கமே இல்லை என்னும்படி அவர் எல்லாரையும் மகிழ்விக்கும் கவித்திறம் கைவரப் பெற்றிருந்தார். மறைந்த கவிஞரின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மதிப்புரை

"சோவியத்து நாட்டில் நான் கண்டதும் கேட்டதும்"

[ஆசிரியர் : பேராசிரியர் க. ந சொக்கலிங்கம், எம்.ஏ. பதிப்பாளர் : நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-2. விலை. ரூ 7-00]

உலகிலேயே இரு பெரு வல்லரசுகளில் ஒன்றாகிய சோவியத்து நாடானது நமக்கு இடுக்கண் ஏற்பட்டபொழுதெல்லாம் அதனைக் களையத் தவறியதில்லை. அத்தகைய நாட்டைப் பற்றி இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் அறிய வேண்டியது முதன்மையாகும். 'எங்கும் எதிலும் சமவுடைமை' என்னும் கொள்கை பரவலாக உலகெங்கும் பேசப்பட்டாலும் செயலளவில் நிறைவேற்றப்படும் நாடு சோவியத் ஒன்றியம் என்பதனைப் பேராசிரியர் தக்க சான்றுகள் மூலம் மெய்ப்பித்துள்ளார். அக்கொள்கை நிறைவேற நாட்டு மக்கள் தளராமல் தயங்காமல் உழைத்தால்தான் மக்கள் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும். இக் கருத்தினை உள்ளத்தில் ஆழமாகப் பதியச் செய்து சோவியத்து மக்கள் வாழ்கின்றனர் என்று 'பதினைந்து கூட்டுக் குடியரசு'களைப் பற்றி நூலாசிரியர் விரித்துரைக்கையில் நம் மக்களும் அக் கருத்தினைப் பின்பற்றி நாட்டை முன்னேறச் செய்யத் தொடங்கும் பொன்னாள் எந்நாளோ என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் எழுவதை நாம் எளிதில் உணரலாம்.

பெண் இனத்தைப் பொறுத்தவரையில் அக்காலத்தில் பலநாடுகளிலும் ஒரே மாதிரியான கருத்து நிலவி வந்திருக்கலாம். சோவியத்து நாட்டிலும் நெடுங்காலம்வரை பெண்ணுக்குச் சம உரிமை கொடுக்கப் படவில்லை; பெண் கல்வி பற்றிய சிந்தனை அதிகம் எழவில்லை. மூடநம்பிக்கைகளும் ஓரளவு அவர்களிடையே இருக்கின்றது என்பதற்கு கக்கூ கோபுரத்திலுள்ள 'பொன் பறவை' சான்றாக விளங்குகிறது.

சோவியத்து நாட்டு மக்களின் நாட்டுப் பற்று, மொழிப்பற்று, இனப்பற்று ஆகியவற்றை அழகுற விவரித்துள்ளார் பேராசிரியர்.

பொருத்தமற்ற இடங்களில் எல்லாம் குறட்பாக்களையும் பிற பாக்களையும் விரவி விடாமல் நவீன பயிர்முறையில் விதைகளை நடுவது போல் பாக்களைத் தேவையான இடங்களில் ஆங்காங்கே பதித்துள்ளமை நூலாசிரியரின் தனித் திறமையை எடுத்துக்காட்டுகிறது. இப் பாக்கள் நல்ல பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் 'ஓய்வகம்', 'உடலம்', 'கோடைவாழிடங்கள்', 'முன்னேற்ற அறிக்கை' போன்ற தூய எளிய தமிழ்ச்சொற்களை உருவாக்கிப் பரப்பியுள்ளமை வரவேற்கத்தக்கது.

இந்நாட்டிலுள்ள இலக்கியங்களுக்கெல்லாம் இலக்கணமாக வாழ்க்கை நடாத்தும் மக்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூலினை-சமூக இயல் நூலினை நம் தமிழகத்திலுள்ள 'அரசாங்க ஓய்வகங்களிலும்' 'கோடை வாழிடங்களிலும்' வைத்துத் தங்கிச் செல்லும் பயணிகள் படித்துப் பயனடைவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமானால் நம்முடைய நாடும் விரைவில் ஒளிபெறும்.

சோவியத் நாட்டில் உள்ள இயற்கைக் கூறுகளையோ மக்கட் பண்புக் கூறுகளையோ ஒன்று விடாமல் (Camera eye) படம் பிடிக்கும் கண்ணோக்கத்துடன் பார்த்துவந்து அதனை இங்கே விளக்கப் புகைப் படம் (Enlarged Photograph) போல் விரித்து எழுதி ஓவியமாகத் தந்துள்ள நூலாசிரியர்க்கு நம் பாராட்டுக்கள் உரித்தாகுக.

இந்நூல் அனைத்திந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் படுமாயின் இந்தியர் அனைவரும் படித்துப் பயன்பெற ஏதுவாகும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக
சென்னை 600001 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

பிறபதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

Mohenjo-daro and Indus Civilization in 3 Big Volumes—Sir John Marshall	450	00
Some land marks in the History of Tamil Prose —R. E. Asher	1	00
Some aspects of Pandyan history in the light of recent discoveries—Dr. K. V. Raman	2	50
First All India Tirukkural Seminar Papers 1972—Ed. Dr. N. Sanjivi	10	00
The treatment of Morphology in Tolkappiyam —Dr. M. Israel	7	00
The first Oriental Scholar (Robert De Nobili) —Dr. S. Rajamanickam, S. J.	125	00
Damilica-Vol II pt III —R. Nagasamy	18	50
Folklore of Tamil Nadu—'Somaley'	8	00
Lothal and the Indus Civilization—S. R. Rao	120	00
The Ramayana in Telugu and Tamil —Dr. C. R. Sarma	15	00
Preface In the Kural—R. C. Kamaliah	20	00
பல்கலைக் கழகப் பழந்தமிழ் பேராசிரியர் பதின்மர் கட்டுரைகள்	15	00
இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும் 40 கட்டுரைகள்	20	00
கடற்கரைக் கவிதைகள்—*வான்முகில்*	2	00
புதிய கோலங்கள்—*தாயம்மை அறவாணன், எம்.ஏ.*	4	00
இராஜநாயகம் (இஸ்லாமியக் காப்பியம்) —*வண்ணக்களஞ்சியப் புலவர்*	10	00
தமிழ்மொழி வரலாறு —*டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்*	20	00
எழுத்தியல்—கு. இன்னாசி	5	00
வள்ளலார் கண்ட ஒருமை வாழ்வு—*சரவணானந்தா*	3	00
உரைநடைத்திறன்—கு. *சோசபுசுந்தரராசு*	4	00
மாநில சுயாட்சி ஏன்?—S. J. *சாதிக்பாட்சா*	4	00
திருச்சிவிசுவநாதம்—*மா. சு. சம்பந்தம்*	4	00
கம்பன் காவிய சாரம்—*எஸ். நல்லபெருமாள்*	7	00
தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும் —*டாக்டர் இ. முருகரத்தினம்*	10	00

பதிவு எண் : M. 4899

கழகப் புதிய வெளியீடுகள்

கிறக்கும் உச்சி (Withering Height)

மூலம் : எமிலி ஜேன் பிராண்டி

சுருக்கத் தமிழாக்கம் : கு. பரமசிவன், எம்.ஏ.

இக் கதை மேலைநாட்டுச் சூழலில் அமைந்துள்ள ஒரு குடும்பக் கதையாகும். ஒரு வேலைக்காரி கதையைக் கூறும் முறையில் இஃது அமைந்துள்ளது இனிய கதை. நல்ல தமிழில், படங்களுடன் அழகிய பதிப்பாக வெளிவந்துள்ளது.

ரு. 6-00

காக்கைபாடினியம் (விளக்கவுரையுடன்)

இந்நூல் யாப்பிலக்கணத்தை விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றது. யாப்பருங்கல விருத்தியைப்போல் நூற்பாக்களும், உரையும், மேற்கோள்களும், எடுத்துக்காட்டுகளும் அமைந்துள்ளன. விலை ரூ. 12-00

அழகொழுகும் ஐந்து அருட்பாடல்கள்

திருவருட்பாப் புகழ்த்திரட்டு

—வள்ளலார் இராமலிங்க அடிகள்

இதன்கண் திருவருட்பாவினின்று 'திருவடிப் புகழ்ச்சி' 'மகாதேவமாலை' 'அருட்பெருஞ் சோதி அகவல்' 'அருட்பெருஞ்சோதி அட்டகம்' ஆகிய நான்கு பதிகங்கள் முழுமையாகவும், மற்றும் பிள்ளையார், முருகன், சிவபெருமான், உமையம்மை, அம்பலவாணர், திருமால் ஆகிய தெய்வங்கள் மீது வள்ளலார் பாடியுள்ளபாடல்களும் இடம் பெற்றுள்ளன.

விலை 2-25

உயர்ந்த பரிசுப் பதிப்பு விலை 4-00

பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள்

இதன்கண் பட்டினத்துப் பிள்ளையார் பாடிய, பதினொராந் திருமுறையிலுள்ள திருப்பாடல்களும் தனிப்பாடல்களும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. விலை 3-25

திருவாசகத் திருப்பாடல்கள்

மாணிக்கவாசகர் அருளிய தேனினும் இனிய அரிய திருவாசகத் திருப்பாடல்கள் யாவும் இதன்கண் இடம் பெற்றுள்ளன. விலை 4-00

தாயுமான அடிகள் திருப்பாடல்கள்

இறையருள் கூட்டவல்ல அரிய மெய்ப்பொருட் கருத்துக்களடங்கிய தாயுமான அடிகள் பாடல்கள் யாவும் இதன்கண் இடம் பெற்றுள்ளன. (அச்சில்)

திருப்புகழ்த் திரட்டு

அருணகிரிநாத அடிகள் அருளிய திருப்புகழ்ப் பாடல்களுள் அரிய பாடல்களின் தொகுப்பு. (அச்சில்)

அப்பர் அச்சகம், சென்னை-600 001